சுன்னுகம், மன்மத சித்திரை கக ✷ (24-4-55) ஞாயிறு

# ஈழகேசரி

EELAKESARI - NATIONALIST TAMIL WEEKLY

மலர் 25 இதழ் 40 | தேசிய வார வெளியீடு ○ நிறுவியவர் : நா. பொன்னையா | தனிப்பிரதி விலை சதம் 10

சாம்பசிவம் அன்ட் கோ.
38, கஸ்தூரியார் வீதி : பெரியகடை : யாழ்ப்பாணம்

H. M. V. — ரேடியோ, கிராமபோன், றெக்கோட்டுகள்

விற்பனைக்கிருக்கின்றன.

N. Sambasivam & Co.,
38, Kasthuriar Road : Grand Bazaar : JAFFNA

JAFFNA COLLEGE LIBRARY
16 MAY 1955
VADDUKODDAI, CEYLON.

"தமிழகத்தின் சிறப்பு இரண்டு; ஒன்று தென்றல்; மற்றொன்று திருவாசகம்; தென்றல் உடல் வெம்மையைப் போக்கும்; திருவாசகம் உளவெம்மையை நீக்கும்."

# தெய்வத் தமிழ்த் தென்றல்

## வேலணை கண்ட திருமுறை விழா

நமது சிறப்பு நிருபர்



எல்லார்க்கும் பொதுவி னடமிடுகின்ற தெய்வம்.

தெய்வத் தமிழும் சைவச் செந்நெறியும் பழம் பெருமையுடன் செழித்து விளங்கிப் புதுமைக் கருத்துக்களையும் வாரி வழங்குவதற்கு வழிகாட்டியுள்ளனவென்றால் அவற்றுக்கென ஒரு விழா எடுத்த பெருமை வேலணைக்கேயுரியது.

புறமதங்களின் படையெடுப்பினுல் சைவம் நசிந்து விடுமோ வென்றஞ்சியகாலத்தில் சமயகுரவர் நால்வரும் தோன்றி அதன் பெருமையை மேன்மேலும் வளர்த்தார்கள் என்று பேசிப் பெருமைப்படும் சைவமக்கள் இன்று சமயத்தின் பேரால பெரு விழாக்கள் எடுப்பதன் மூலம் தம் தொண்டைச் சுலபமாக முடித்துக் கொள்கிறார்கள். இந்த வகையில இம்மாதம் 17, 18, 19ஆந் திகதிகளில் வேலணையில் நடைபெற்ற திருமுறை விழாவானது சைவமக்கள் மத்தியில் பெரும் புத்துணர்ச்சியை ஊட்டியதென்றே சொல்லவேண்டும்.

சென்றவருடம் சிலம்புச்செல்வத்தின்பேரால் விழாவெடுத்து முன்மாதிரி காட்டிய தீவுப் பகுதிமக்கள் தேவார திருவாசகங்களுக்கு விழாநடத்துவதிலும் முந்திக்கொண்டுவிட்டார்கள். அவர்களிடத்திலே உள்ள சமய, இலக்கிய ஆர்வத்துக்கும் உணர்ச்சிக்கும் அளவு கருவியாக விளங்குகின்ற சில பெரியார்களை இந்த நாடு என்றும் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறது. இம்மாதம் 17ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இவ் விழாவைக் காண யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்து மட்டுமல்ல, இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பெருந் தொகையான சைவ மக்கள் அங்கு திரண்டிருந்தனர்.

### ஊர்வலக் காட்சி

விழாவின் முதல் நிகழ்ச்சியாக நடைபெற்ற திருமுறை நூல்களின் ஊர்வலமானது அவ் விழாவின் சிறப்புக்கு முன்னறிவிப்பாக அமைந்தது. புளியங்கூடல் மகாமாரியம்மன் ஆலயத்திற் பூசை நடைபெற்ற பின் அங்கிருந்து ஊர்வலம் புறப்பட்டு வந்துகொண்டிருந்தது. அலங்கரிக்கப்பட்ட கேடகமொன்றில் தில்லை நடராசரின் திருவுருவப் படத்தின் கீழ் நால்வர் படங்களும் அவற்றின் அடியில் திருமுறை நூல்களும் வைக்கப்பட்டிருந்தன. அங்கு திரண்டிருந்தமக்கள் கூட்டம் இரு வரிசையாக முன் செல்ல பெண்களும் குழந்தைகளும் பின்தொடரக் கேடகத்தை 12 வெண்ணிற எருதுகள் இழுத்துச் சென்றன. ஊர்வலமானது வேலணை மத்திய கல்லூரி மண்டபத்தை வந்தடைந்தபோது மக்கள் கூட்டம் மேலும் அதிகரித்துவிட்டது.

ஏறக்குறைய 15ஆயிரம் பேர் அமரக்கூடியவாறு விஸ்தாரமாயமைக்கப் பெற்ற தென்னங் கீற்றுக் கொட்டகையானது ஒரு புனித ஆலயம்போன்று காட்சியளித்தது. தென்னிந்திய சிவத்தலங்களின் வானுற ஓங்கிய கோபுர வாயிலை நினைவூட்டும் வகையில் அமைக்கப்பட்டிருந்த பந்தல் முகப்பு அங்குகூடிய ஒவ்வொருவரையும் சிறிது நேரம் தன்னை நிதானத்துடன் நோக்குமாறு செய்துவிட்டது. மலர்மாலைகளாலும் மகரதோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த பந்தலிலிருந்து சைவமணம் கமழ்ந்து கொண்டேயிருந்தது.

### இடபக்கொடி

ஊர்வலம், விழா மைதானத்தை வந்தடைந்ததும் அங்கு திரு. ஞானப்பிரகாச தேசிகர் இடபக்கொடியை மிகுந்த பக்தி சிரத்தையுடன் ஏற்றி வைத்தார். அந்த இடபக்கொடியானது தென்றலில் மிதந்து அசைந்தாடிக் கொண்டிருந்ததைக் கண்ட சில வாலிபர்கள் கொடியாராய்ச்சியி லிறங்கி எதை யெதை யெல்லாமோ பேசியது என்காதில் விழத் தவறவில்லை.

நாயன்மார் படங்களும் திருமுறை நூல்களும் விழாமேடையில் வைக்கப்பட்டுப் பூசை பிரார்த்தனை முதலானவை நடைபெற்றபின் விழாச் சொற்பொழிவுகளாரம்பமாயின. புங்குடுதீவு வேதாகம பாடசாலையைச் சேர்ந்த பிராமணோத்தமர்கள் வேதம் ஓதுவதற்குமட்டும் 10 நிமிடங்கள் வரை ஒதுக்கப்பட்டிருந்தது. ஒரு பெரியார் தலையிட்டிருக்காவிடில் வேத பாராயணத்துடன் காலை நிகழ்ச்சி முடிவடையலாமோ என்று கூடச் சிலருக்கு எண்ணம் உதித்தது. சுத்தானந்த பாரதியார்முன்னிலையில் அட்சரசுத்தியுடன் ஓதி ஆசீர்வாதம் பெற்ற அந்தக் குருக்கள் குழாம் மிகவும் சிரத்தையுடன் சுலோகங்களைக் கடல்மடை திறந்ததுபோல ஓதிக் கொண்டிருந்தது.

### குன்றக்குடி அடிகளார்

ஈழத்துக்கு இரண்டாந்தடவையாகச் சமுகமளித்திருந்த குன்றக்குடி அடிகளை வரவேற்று வாழ்த்துரை வழங்குவதையும் இவ் விழாவின் ஓரங்கமாகவே சேர்த்திருந்தார்களாகையால் திருவாளர் க. இராமச்சந்திரனின் புதல்விகள் இருவர் வாழ்த்துப் பாவொன்றை முதலிற் பாடினார்கள். விழா வரவேற்புச் சபைத்தலைவர் திரு. செ. சிவஞானம் அவர்கள் வாசித்து வழங்கிய வரவேற்புப் பத்திரத்தில் அடிகளின் பாதம் பட்ட காரணத்தால் இந்த நாடு புனிதமடைந்ததென்றும் அவரது சேவை கடல்கடந்த நாடுகளிலும் பரவியிருப்பது சைவமக்கள் செய்த பெரும் பாக்கியமேயென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன்பின்னர் விழா வரவேற்புரையைப் பண்டிதர் க.பொ. இரத்தினம் எம். ஏ. பி. ஓ. எல். நிகழ்த்தினர்.

### தலைவர் கந்தையா

இவ்விழாவுக்கு உயிர்நாடியாக விளங்குபவர்களில் முதன்மையானவரெனச் சொல்லப்படும் வழக்கறிஞர் திரு. வே. அ. கந்தையா அவர்கள் விழாத் தலைவர் பொறுப்பைப் பெற்றிருந்தது மிகவும் பாராட்டத்தக்கது. இத்தகைய பெரிய விழாக்களை ஏற்கலவே நடத்தி அனுபவப்பட்ட திரு. கந்தையா மிகவும் கட்டுப்பாடுடன் ஒவ்வொரு காரியங்களையும் கவனித்துக் கொண்டிருப்பதுடன் விழாவை ஆரம்பித்து வைக்குமாறு குன்றக்குடி அடிகளைக் கேட்டுக்கொள்ளும் பணியையும் ஏற்றிருந்தார். அவர் மிகுந்த பக்தி சிரத்தையுடன் அடிகளை நோக்கி விண்ணப்பித்தபோது சாந்தமும் பொலிவும் பொருந்திய அந்த உருவம் அனைவரையுங் கவர்ந்தது.

### அடிகளார் உரை

நாவலர் பெருமானை நினைவுபடுத்திக்கொண்டு விரிவுரையாற்ற ஆரம்பித்த அடிகளார் திருமுறைகளின் பெருமையையும் அவற்றுக்கு விழாக் கொண்டாட வேண்டியதன் அவசியத்தையும் விரித்துரைத்ததோடு அரசியலில் பங்கு பற்றிக்கொண்டே சமயவாழ்க்கையைக் கடைப்பிடிப்பதெங்ஙனம் என்பதையும் சபையோருக்கு எடுத்துரைத்தார்.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்பார்க்க)



திருஞானசம்பந்த சுவாமிகள்



திருநாவுக்கரசு சுவாமிகள்



சுந்தரமூர்த்தி சுவாமிகள்



மாணிக்கவாசக சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைப் பாடல்கள் ஒப்பற்ற தமிழ் மந்திரங்கள்

வேலணைத் திருமுறை விழாவில் பண்டிதர் கா. போ. இரத்தினம் எம். ஏ. அவர்கள் ஆற்றிய வரவேற்புரையின் சுருக்கம் வருமாறு:

ஈழநாட்டிலே முதன் முறையாக நடக்கும் இத் திருமுறை விழாச் சைவப் பெருமக்கள் யாவராலும் மகிழ்ச்சியுடன் வரவேற்கத் தக்கதொரு பெருவிழாவாகும். எமது சைவ சமயத்தின் பெயரால் நம் மக்களிடையே பரவி நிலைத்துள்ள மூடக் கொள்கைகளையும் கண்மூடிப் பழக்க வழக்கங்களையும் நீக்கிச் சைவ சமயத்தின் உண்மை நிலைமையை விளக்குவதற்குத் திருமுறை விழாக்கள் வாய்ப்பளிக்கு மென்பதிற் சந்தேகம் இல்லை. நம்மிடையே உள்ள உயர்வு தாழ்வுகளை அகற்றி உயர்ந்த வாழ்வைச்—சன்மார்க்க வாழ்வைச்—சைவத் திருநெறி வாழ்வை—நாம் வாழுதற்கு இத் தெய்வத் திருமுறைகளிலே அளவிலாத பற்றும், இவை புலப்படுத்தும் திருநெறியைப் பற்றிய அறிவும் இன்றியமையாதன என்பதைப் பல ஆண்டுகளாக யான் உரைத்து வந்துளேன். திருமுறைவிழாக்கள் பல இடங்களில் நிகழவேண்டும் என்றுங் கருதினேன். கொழும்பில் ஒரு திருமுறை விழாவை நடத்துவித்தற்கும் முயன்றுவந்தேன். அவ்விழா உருப்படுதற்கிடையில் எனது சொந்த ஊராகிய வேலணையில் இத் திருமுறை விழா நடப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

திருவார்திரு குன்றக்குடியடிகளார் இவ்விழாவிற் கலந்து கொள்ளுதற்கு இசைந்து இங்கு எழுந்தருளியிருப்பது இவ்விழா இப்பெரும் பணியை நிறைவேற்றும் என்னும் நம்பிக்கையை எமக்கு அளிக்கின்றது.........

தேவார திருவாசகங்களைப் பாடித் தமிழினை வளம்படுத்திச் சைவநெறியினை நிலைநாட்டிய நாயன்மார்களுடைய காலத்துக்கு முன்பு சைவத்திருநெறியினை விளக்கி மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளத்தக்க நூல்கள் தமிழிலே அதிகமாகத் தோன்றவில்லை. வடமொழியிலுள்ள நூல்கள் தமிழ் மக்கள் பலருக்கு விளங்காத மொழியில் அமைந்திருந்தன. வடநாட்டிலிருந்து தென்னாடுபுக்க சமண பௌத்த சமயங்களின் தலைவர்கள் தமிழ் மக்களின் தாய்மொழியாகிய தமிழிலே தமது சமய உண்மைகளை எழுதியும் பேசியும் தமது சமயங்களைத் தமிழ்நாட்டில் வேரூன்றச் செய்தனர். இதனால் வேத நெறியும் தளர்ந்தது; சைவத் துறையும் பொலிவிழந்தது. வேத நெறி தழைத்தோங்கவும் மிகு சைவத் துறை விளங்கவும் தாய்மொழியாம் தமிழிலே சைவ சமய உண்மைகளை எடுத்துக்கூறி மக்களின் உள்ளத்துணர்ச்சியை எழுப்ப வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்பொழுது நம்சமயாசாரியர்கள் தோன்றி, மொழிக்கு மொழி தித்திக்கும் தேவார திருவாசகங்களைப் பாடிச் சைவ சமயத்தை நிலைநாட்டினர்.

பின்னர் சென்ற நூற்றாண்டிலே, மேனாட்டார் ஆட்சியில் கிறித்துவ சமயத்தால் நம் சைவ சமயத்துக்கு இடையூறு ஏற்பட்டது. அப்பொழுது நாவலர் பெருமான் தோன்றி வடமொழியிலுள்ள சமய நூல்கள் சிலவற்றைத் தமிழில் உரைநடை நூல்களாக ஆக்கியும் செய்யுள் நூல்கள் பலவற்றை யாவர்க்கும் விளங்கத் தக்க உரைநடையில் எழுதியும் சைவசமயக் கருத்துக்களை மக்களிடையே பரப்பிச் சைவ சமயத்தைப் பாதுகாத்தார்.

இப்பொழுது நம் ஈழநாடும் தாய்நாடும் அரசியற் சுதந்திரம் பெற்றுவிட்டன. இதன் பயனாக எம் தாய்மொழியாகிய தமிழ்மொழிப்பற்று மக்களிடையே வீறுகொண்டு எழுந்துள்ளது. இதனால் நம் நாட்டிலும் வீட்டிலும் ஆலயங்களிலும் நம் தாய்மொழியே தலையிடம் பெறவேண்டும் என்னும் எண்ணம் நாள்தோறும் பெருகிவருகின்றது. அரசியல் மொழியாகவும் கல்வியூட்டும் மொழியாகவும் தமிழ்மொழி விரைவில் நிலைபெறப் போகின்றது. நமது ஆலயங்களில் நடக்கும் அருச்சனை தமிழிலும் நடக்கவேண்டும் என்று பலர் உணருகிறார்கள்; சிலர் உரைத்தும் வருகிறார்கள். ஆனால் தலைமுறை தலைமுறையாக அடிமை வாழ்விலே தோய்ந்த காரணத்தால் இந்த உண்மையை உணரவும், உணர்ந்தாலும் அச்சமின்றி உரைக்கவும் பிறர் உரைத்தாலும் ஏற்றுக் கொள்ளவும் ஆற்றலின்றிச் சிலர் இருக்கின்றார்கள். இவர்கள் யாவரும் வெட்கித் தலைகுனியத் தக்கதாக நம்முடைய கோயில்களிலே தமிழிலும் அருச்சனை செய்யலாம் என்று உறுதியுடன் உரைத்து நிலைநாட்டிய பெருஞ்செயலாளர் இங்கு எழுந்தருளியிருக்கும் குன்றக்குடியடிகளாவார். இக்காலத்துக்கு வேண்டிய இப்பெருஞ் செயலையுஞ் செய்தற்கே இவர்கள் அவதரித்தார்கள் எனவும் அறிஞர்கள் கூறுகிறார்கள். அடிகளார் முன்னணியில் நின்று நடத்திவரும் இச்சீரிய தொண்டு, தமிழைத் தாய்மொழி என்று கூறும் சைவ நன்மக்கள் எல்லாராலும் உச்சிமேற்கொண்டு போற்றத்தக்கது; தெய்வத் திருமுறைகளுக்கும் பெருமை அளிப்பது. இத்திருமுறைகள் வடமொழியிலுள்ள எந்த நூல்களுக்கும் — வேதாகமங்களுக்குங்கூட — எவ்வாற்றானும் குறைந்தன அல்ல என்பதை ஏற்றுக்கொள்ளாத சைவத் தமிழ் மக்கள் நம்மிடையே இருப்பார்கள் என்று நான் எண்ணவில்லை.

உலகத்துள்ள ஏனைய மொழிகளிலும் பார்க்கத் தமிழ்மொழி பல துறைகளிலே சிறந்துவிளங்குகிறது. தமிழ்மொழியிலுள்ள அருட் பாடல்கள் போன்ற பாடல்களை வேறெம் மொழியிலும் காணல் முடியாதென மேனாட்டறிஞருங் குறிப்பிட்டுளர்.' இப்பெருமையினைத் தமிழ்மொழிக்குக் கொடுப்பன இப்பனிரு திருமுறைகளிலுமுள்ள பதினெண்ணாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களேயாகும். இவை சைவ சமயத்துடன் தொடர்புடையனவாயிருப்பினும் தமிழ் வளமும், உள்ளத்தையும் ஊனையும் உருக்கும் ஆற்றலும் மிக்கனவாதலின் பிறமதத்தவர்களையும் பிறமொழியினரையுங்கூட ஈர்த்து இன்புறுத்துகின்றன.

இப்பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்களாகும். தேவாரங்கள் என்ற பெயர் பிற்காலத்திலே தோன்றியது, பத்தாம் நூற்றாண்டுக்குப் பின்தோன்றிய கல்வெட்டுகளிலும உமாபதிசிவாசாரியார் பாடிய கோயிற் புராணத்திலும் தேவாரம். எனும் சொல்லை முதலிலே காண்கிறோம். தேவாரங்கள் தோன்றிய காலம் முதல் பலநூற்றாண்டுகளாகத் தேவாரம் என்னும் சொல் தமிழ்நாட்டில் வழங்கவில்லை. தேவாரப் பாடல்கள் யாவும் 'தமிழ் மாலை' என்றே முதலில் வழங்கப்பட்டுள. அப்பர் பெருமான் "பன்னிய நூற்றமிழ்மாலை பாடுவித்தென் சிந்தை மயக்கறுத்த திருவருளினானை" என்று தமது பாடல்களைத் தமிழ் மாலை எனவே குறிப்பிட்டுளர். "நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசனும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை" என்று சுந்தரர் குறிப்பிடுகிறார். தேவாரங்களிலும் பெரியபுராணத்திலும் தமிழ்மாலை எனும் சொல்லே பயின்று வந்துள்ளது. தமிழ்மாலை எனும் இச்சொல் தமிழுக்கும் சைவத்துக்கும், தமிழுக்கும் தேவாரங்களுக்குமுள்ள தொடர்பை எவ்வளவு சிறப்பாக விளக்குகிறது பாருங்கள்,

மூவர் தேவாரங்களையும் 'மூவர் தமிழ்' என்றே திருமுறை கண்ட புராண ஆசிரியரும் ஔவையாரும் குறிப்பிட்டுளர். தேவாரங்கள் தமிழ்மொழிக்கும், சைவ சமயத்துக்கும் தென்னாட்டுக்கும் அளவில்லாத பெருமையினை அளித்திருக்கின்றன. வேதாகமங்களுடைமையாற் சிறந்து விளங்கிய வடமொழியிலும் [illegible] தமிழ்மொழி சிறந்து விளங்கியது. இதனை அழகாகச் சேக்கிழார் பெருமான் பல இடங்களிற் புலப்படுத்தியுளர்.

"திசை அனைத்தின் பெருமை எலாம்
தென்திசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும்
மேதினியே தனிவெல்ல
அசைவில் செழுந் தமிழ்வழக்கே
அயல்வழக்கின் துறைவெல்ல"

எனும் பாடலில், திருஞானசம்பந்தர் அவதரித்துத் தமிழ் மாலைகளைப் பாடித் தமிழையுஞ் சைவத்தையும் வளம்படுத்தியதால் ஏனைய திசைகளிலும் பார்க்கத் தென்திசை பெருமை பெற்றது எனவும், எல்லா மொழிகளிலும் தமிழ்மொழி உயர்ந்துவிட்டது எனவும் அவர் கூறிய அருமைப் பாட்டை உணரும் ஆற்றல் உள்ளவர்கள் தமிழிலே பூசை செய்வதை வரவேற்பதற்கு இன்னுங் காலந் தாழ்த்துவார்களா?

மேலுஞ் சேக்கிழார் சுவாமிகளே "நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க அர்ச்சனை பாட்டே ஆகும், ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ்ப்பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்" என்று கூறிச் சைவசமய முதற் கடவுளாகிய சிவபெருமானுக்குத்—தூமறை பாடும் வாயார்க்குத் தமிழ்மேல் உள்ள விருப்பத்தைக் குறிப்பிட்டார்; வடமொழி வேதங்களிலும் இத்தமிழ் மாலைகள் சிறந்தன என்பதையும் புலப்படுத்தினார். சுந்தரமூர்த்தி நாயனாரும் "தமிழோடிசை கேட்கும் இச்சையால் காசுநித்தல் நல்கினீர்" என்று பாடித் தமிழ் மாலைகளிற் சிவபெருமானுக்குள்ள ஈடுபாட்டைச் சுட்டிக் காட்டியுளர்.

"அங்கண் வடதிசை மேலும் குடக்கின் மேலும் அருந்தமிழின் வழக்கு அங்கு நிகழாதாகத் திங்கள் புனைமுடியார் தந்தானந்தோறும் சென்று தமிழ் இசை பாடும் செய்கை போல" எனும் செய்யுளில் தமிழ் வழங்காத இடங்களிலுள்ள திருக்கோயில்களிலும் தமிழ் மாலைகள் பாடப்படவேண்டும் என்னும் குறிப்பினை உட்கொண்டு ஞானசம்பந்தர் பதிகம் பாடினார் எனவுஞ் சேக்கிழார் செப்பியுளர்.

"பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக மண்ணன்றி விண்கொடுக்கும் மணிகண்டன்" எனவும்,

"தமிழோடிசைபாடல் மறந்தறியேன்" எனவும்,

"எந்தைபூம் புகலூர் பாடுமின் புலவீர்காள்" எனவும் வரும் நாயன்மார்களுடைய கூற்றுக்கள் கோயில்களிலே தமிழ்ப்பாடல்களைப் பாடிக் கடவுளை வணங்குதல் வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றன. ஆகவே இத்திருமுறை விழாவிற் பங்குபற்றும் அன்பர்களும் திருமுறைகளைப் போற்றுஞ் சைவ சீலர்களும் எம் தாய்மொழியாம் தமிழிலேயே எம்முடைய கோயில்களில் அருச்சனை முதலியன செய்யக் கடமைப் பட்டவர்களாவார்கள். இவ்வாறு செய்ய வேண்டுமென்று கேட்பது வடமொழி மேற்கொண்ட வெறுப்பினாலன்று; "எம்மொழியினும் இனிய நமது தமிழ்மொழி" என்று நாவலர் பெருமான்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம் பார்க்க)

செங்கலடியில்
ஈழகேசரி
கிடைக்குமிடம் :-
அ. முத்துக்குட்டி
ஏறூவூர், செங்கலடி




C.C.C. பண்படுத்தும்
புகையிலைப் பசளை
கொழும்புகொமர்ஷல்கொம்பனி, லிமிட்
தபாற்பெட்டி 33 :: :: கொழும்பு.
C. C. C. பசளை கிடைக்குமிடங்கள்:-
சுன்னுகம் — R. M. கான்பாய் ஸ்ரோர்ஸ்
யாழ்ப்பாணம் — M. S. மணியம் அன்ட் கோ
ஊர்காவற்றுறை — கைற்ஸ் டிஸ்ரிபியூரேர்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புத் தமிழகப் புலவர் பரம்பரை — 3

# குமாரசுவாமி ஐயர்

## பண்டித வி. சீ. கந்தையா

(10-4-55இன் தொடர்ச்சி)

அரசடி ஆசிரிய கல்லூரி அதிபராயிருந்த திரு. தம்பு என்பார் ஐயரவர்களுடைய வைத்தியப் புலமையையும் தமிழ்ப் புலமையையும் வியந்து, மலேரியாக் காட்டுச் சுரத்தைப் பற்றிய பாடல் நூல் ஒன்று செய்து தரும்படி அவரை வேண்டினர். ஆங்கில வாடை மிகுந்த மேனாட்டு வைத்திய முறைகளிலேயே பெரும் நம்பிக்கை கொண்டிருந்த சூழல் ஒன்று இவர்மூலம் அவ்வாறு பணித்த தன்மையை அறிந்த ஐயர் அவர்கள் மேலைத்தேச வைத்திய முறைகளையும் சிறிது அறிவாராதலால் தமிழ் வைத்திய வழிகள் கொஞ்சமும் கலப்புறாத முறையில் ஐம்பத்தொரு பாடல்களைக் கொண்ட மலேரியா எனும் காட்டுச் சுரம் என்ற நூல் ஒன்றை ஆக்கி அளித்தார். வெண்பா முதலாக, கும்மி, நொண்டிசசிந்து, ஆனந்தக்களிப்பு, குறம் என்பவற்றால் நடந்து கலிவெண்பாக்களால் முடிவுறும் இந்நூல் 1931இல் மேற்குறிப்பிட்ட நல்லதம்பி ஆசிரியர் அவர்களால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது. இந் நூற் சிறப்பைப் பாராட்டிய வைத்தியர் குழு, மலேரியா வாரவிழா ஒன்றில் நூலை அரங்கேற்றி ஐயரவர்களுக்குப் புகழ் மாலையுஞ் சூட்டிக் கௌரவித்தது.

கொந்தலர் குழன்மடவாய்—யான்
கூறிடும் வாசகம் கேளனமே
முந்தையர் மலைச்சுரத்தால்—உடல்
முற்றும் குழைந்தனர் பற்றிலர்போல்

என்று கும்மிப் பாடல்கள் இன் சொற்களால் தொடங்குகின்றன. ஈற்றி லமைந்து நிற்கும் கலிவெண்பாவின் கடைசிப் பகுதி:

உற்றூர் முதலாய்
ஒழிந்தோரையு மிழந்து
வற்றாத செல்வம்
மணிமாடு—நற்போகம்
விட்டுப் பிரிந்து
விழற்கிறைத்த நீராகிக்
கெட்டுவார் விண்ணைக்
கிளந்து

என்று தகுந்தபடி இச்சுரம் தடுக்கப்படாவிடின் மனித குலத்தையே பூண்டோடழிக்க வல்லது என்று வலியுறுத்திக் கூறுவதாயமைந்து நூல் நிறைவுறுத்தப் பட்டுள்ளது.

சிவ வழிபாட்டின் சின்னமான உருத்திராக்கத்தின்மீது பெரு மதிப்புப் பூண்டு அதனை என்றும் கழுத்திலணிந்து பெருமை கொண்ட இவர் உருத்திராக்க மான்மியம் என்னும் செய்யுள் நூல் ஒன்றையும் ஆக்கினார்கள். சிவ தத்துவத்தின் நுண் கருத்துக்களையும், உருத்திராக்க மகிமையையும் விளக்கும் இந்நூல் வெண்பா, ஆசிரிய விருத்தம், அகவல் என்பன கலந்து யாக்கப்பட்டு ஓர் இலக்கிய நூல்போன்ற நடைபெற்று விளங்குகின்றது.

இவர் கோட்டைமுனையில் அமைந்துள்ள வீரகத்திப் பிள்ளையார் கோயிலின் பரிபாலகராய்ப் பல ஆண்டுகள் இருந்து அக் கோயிலைப் புதுக்கித் திருப்பணிகள் அனைத்தையும் பெருமைப்படுத்தியவர். அக் கோயிலிற் சிலகாலம் புராண வகுப்புகளையும் நடாத்திச் சைவம் வளர்த்த இப் பெருமையானரது உழைப்பும் செல்வமும் கோயிற் பணிகளுக்கென்றால் 'கணக்கு வழக்கற்றுச்' செலவழிக்கப்பட்டும். அக்காலத்தில் மட்டக்களப்பில் நடந்த சைவ சமயக் கிளர்ச்சியிலும் பங்குகொண்டு பல இடங்களில் சைவப் பிரசங்கங்கள் ஆற்றி யிருக்கின்றனர், சைவ சித்தாந்தச் சிறப்புகள் இவர் வாயிலாய் நாடெங்கும் அப்போது பரப்பப்பட்டன. வயது முதிர்ந்து வெளிப் பணிகளில் ஈடுபாடு குறைந்து வீட்டில் இருந்த காலத்திலும் பல அறிஞர் இவரை நாடிச்சென்று புத்திமதிகளைப் பெற்றுச் செல்வாராயினர். இவருடன் பேசும் சந்தர்ப்பம் பெற்ற எவரும் சைவம், இலக்கியம், மருத்துவம் என்ற துறைகளில் ஓரளவாவது அறிவுபெற்றே மீளுவர்.

மூப்புக் காலத்தினைப் பொதுப் பணிகளின் ஈடுபாட்டிலிருந்து விலக்கித் தன்னில்லத்தையே கோயிலாக மாற்றிச் சிவ பூசனைகளிற் கழித்துவந்து சர்வசித்து வருடம் சித்திரை மாதம் 20ஆந் திகதி (1947இல்) இவ்வறிஞர் இறைவனடி புகுந்தபோது மட்டக்களப்பு நாடு ஒரு தமிழ்ச் செல்வனை இழந்து தவித்தது. அவருடைய உறவினரும் நன் மாணவருள் ஒருவருமான பண்டிதர் சந்திரசேகரம் அவர்கள் கூறியதுபோன்று:

பாட்டமைதி எங்கேநின்
பண்பெங்கேசொற்பெருக்குக்
கேட்டமைத லெங்கேஎங்
கேன்வனே—கூட்டுறுபொற்
சிலைக் குமார
சுவாமிநின் சேர்ந்தனையே
ஞாலத் தியல்பிதுவோ நாட்டு

என்று அவர்தம் மாணவர்களும் தமிழறிஞர்களும் இரங்கினர். மட்டக்களப்புத் தமிழகத்தின் புகழினை உயர்வுறுத்திச் சென்ற குமாரசுவாமி ஐயரவர்களது புகழ் என்றும் நிலைக்குமாக!

# திருமுறைப் பாடல்கள்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

போற்றிய தமிழ்மொழியில்—எமது தாய்மொழியில்—எமக்குப் பொருள் விளங்கும் தெய்வத் தமிழ் மொழியில் திருமுறைகளைத் தந்த சைவப்பெரியார்கள் தங்கருத்துக்கேற்ப நாம் கடவுளை வழிபட்டு உய்தி பெறவேண்டும் என்னும் நோக்கத்தினாலேதான். பொருள் விளங்காத வடமொழியிலுள்ள சுலோகங்களை ஓதுவதாலும் கேட்பதாலும் நம் உள்ளம் எத்தகைய உணர்ச்சியையும் அடைவதில்லை. ஆனால் உள்ளத்தை உருக்கும் திருமுறைகளை ஓதிக் கடவுளை வணங்கும்பொழுது நாம் பெறும் இன்பத்தை அளவிட்டு உரைத்தல் முடியுமா? சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுதல் வேண்டும் என்பது மாணிக்கவாசகர் தம் ஆணையாகும். ஆகவே இனிமேலாகுதல் நாம் இலகுவில் பொருள் விளங்கும் தமிழ் மாலைகளை முறைப்படி ஓதியும் ஓதுவித்தும் உயர்நிலை அடைவோமாக.

குணம் நிறைந்த
ஸ்டார் மார்க்
பாக்கு வெட்டிச்
சீவல்களையே
உபயோகியுங்கள்.
எங்கும் கிடைக்கும்.
தயாரிப்பாளர் :-
A. K. பஞ்சாட்சரம்
46, பெரியகடை மார்க்கற்,
யாழ்ப்பாணம்.
[A 73]

இக்காலத்தில் எமது சமய வாழ்வு சமூக வாழ்வுடன் இணைந்து செல்லாது தனித்து நிற்கின்றது. இந்த நிலைமையை மாற்றுதற்கும் இங்கு எழுந்தருளியிருக்கும் அடிகளார் முயன்று வருகின்றார்கள். 'அன்பர் பணியே அரன் பணி', 'தாழ்த்தப்பட்டோரைத் தாங்குதலே சைவப்பணி' என்று அவர்கள் போதித்தும் சாதித்தும் வருகிறார்கள். தீண்டாதார் என்று அறியாமையினாலும் சுயநலத்தாலும் நாம் ஒதுக்கி வைத்திருக்கும் மக்களின் சேரிகள் எங்குஞ் சென்று அம்மக்களின் நல்வாழ்வுக்காகப் பெருந்தொண்டாற்றி வருகின்றார்கள். திருமுறைகளைப் போற்றும் இத்திருநாளில், சைவப் பெருமக்கள் யாவரும் சைவத் திருநெறிக்கே மாசுவிளைக்கும் இத் தீண்டாமையை நம் நாட்டினின்றும் அகற்றிவிட முடிவு செய்து முயற்சித்தல் வேண்டும். நிற்க,

எமது திருக் கோயில்களிலே திருமுறைகள் புலப்படுத்தும் வழிபாட்டு முறைக்கு மாறாக இருக்கும் அழகற்ற செயல் பணங் கொடுத்து அருச்சனை செய்வித்தலேயாகும். இதனால் அன்பையும் அருளையும் உண்டாக்கவேண்டிய வழிபாட்டு முறை ஒரு வியாபார முறையாக மாறிவிட்டது. வழிபடுவோரின் பணநிலைக்கேற்பக் கடவுள் அருளை விலைக்கு வாங்கும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. 25 சதம், 50 சதம், ஒரு ரூபாய் முதலிய தொகைகளைக் கொடுத்துச் சீட்டுப் பெற்ற பின்னரே கடவுள் அருளை நாடல் வேண்டியிருக்கின்றது. கோயில்களைப் பரிபாலிப்பதற்கும், அவற்றிலே பணி ஆற்றுபவர்களுடைய வாழ்க்கைச் செலவுக்கும் பணம் வேண்டும் என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். ஆனால், கடவுள் அருளை விலை கூறி விற்கும் சீட்டுக்கள் வாயிலாகவும், அருச்சனைக்குப் பெறும் பணம் வாயிலாகவும் கோயிலுக்குப் பொருளையீட்டுதல் பொருத்தமற்றதாகும். இதனையும் மாற்றி அமைத்தற்கு நாம் முயலவேண்டும்.

அடுத்ததாக நமது சமயத்தவர்கள் யாவரும் ஒன்றுபட்டு உடனே செய்யவேண்டிய பெரும்பணி கோயில்களில் உயிர்ப்பலி இடுதலை நீக்குதலேயாகும். அன்பர்கள் சிலருடைய முயற்சியினாற் பல கோயில்களில் இந்த ஆபாசச் செயல் நிறுத்தப்பட்டுள்ளது. எனினும் இன்னும் பல கோயில்களிலே தெய்வத்தின் பெயரால் உயிர்கள் நூற்றுக்கணக்கில் வதைக்கப்படுகின்றன. இந்த அநியாயத்தை நீக்க முயற்சிக்காமல் திருமுறை விழாக்களையும் சைவ மகாநாடுகளையும் மாத்திரம் நடத்துவதினாற் பெரும் பயன் விளையாது. இத் திருமுறைவிழாவிற் கலந்துகொள்ளும் தமிழ்ப் பெரியார்கள் ஒன்றுபட்டு உழைத்தால் இவ்வாண்டு முடிவதற்கு முன்னரே உயிர்ப்பலி இடும் பாதகச் செயலை ஒழித்துவிடலாமன்றோ!

திருமுறை என்பதில் திரு என்பது 'தெய்வத்தன்மை உடைய' என்ற பொருளைத் தரும் அடையாகும். முறை என்பது, நூல் என்னும் பொருளை உடையது. ஆகவே திருமுறை என்பது தெய்வத் தன்மையுடைய நூல்கள் எனப்படும். முறை என்னும் சொல் பெரிய புராணத்திலே தேவாரச் சுவடிகளைக் குறிக்

(தொடர்ச்சி 10ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்துப்பேனாமன்னர்கள்-15

## ச. அம்பிகைபாகன், பி. ஏ.

ஈழநாடு சுதந்திரமடைந்து தாய்மொழிகள் முன்னணிக்கு வந்துகொண்டிருக்கும் இக்காலத்திற்கூடத் தமிழ், தமிழ் ஆசிரியர்கள், தமிழ்ப் பத்திரிகைகள், தமிழ் எழுத்தாளர்கள் என்றால் மாற்றாந் தாய் மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள் ஆங்கிலம் படித்தோர். ஏறக்குறைய இருபது வருடங்களுக்குமுன் இருந்த நிலைமையைக் கற்பனை கூடச் செய்ய என்னால் முடியவில்லை. அடிமை மொழி என்று வெறுத்தொதுக்கினார்கள் பலர். அந்தக்காலத்திலே தமிழ் அபிமானமுடையவராய், அன்றும், இன்றும், என்றும் தமிழாசிரியர்களையும், பத்திரிகைகளையும், எழுத்தாளர்களையும் கௌரவித்து நடத்திவரும் ஒரு சில ஆங்கில ஆசிரியர்களில் முன்னணியில் நிற்பவர்தான் திரு. ச. அம்பிகைபாகன், பி. ஏ. அவர்கள்.

"இலங்கையில் தமிழில் திறம்பட எழுதக்கூடியவர் பலர் இருப்பதாகத் தெரிகிறது. இந்த எழுத்தாளர்களுடைய கட்டுரைகளும் கதைகளும் சில தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அவற்றிற் சிலவற்றிற்குப் பாராட்டுரைகளும் கிடைத்துள்ளன" என்ற தன் அபிப்பிராயத்தை ஒரு பத்திரிகையில் வெளியிட்ட அவர், கிராம ஊழியன் மலர் ஒன்றில் ஈழத்து எழுத்தாளர்களாகிய வித்துவான் கணேசையர், நவாலியூர் சோமசுந்தரப்புலவர், விபுலாநந்த அடிகள், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சி. வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், சோ. சிவபாதசுந்தரம், சம்பந்தன் என்போரைப் பற்றிச் சுருக்கமாக விமர்சனமும் செய்திருக்கிறார்.

எழுத்தாளர்கள் அபிப்பிராயம் கூற அஞ்சும் சில வினாக்கள் இருக்கின்றன. உதாரணமாக இக்காலப் பத்திரிகைகள், நூல்கள் இவற்றில் சிறந்தன எவை? என்று பிரபல எழுத்தாளர் ஒருவரைக் கேட்டுப் பாருங்கள். அவர் பூசி மெழுகித்தான் பதில் கூறுவாரேயொழிய நிறுதிட்டமாகச் சொல்லக் கூசுவார். ஆனால் அம்பிகைபாகன் அவர்களை ஒரு பத்திரிகைப் பிரதிநிதி அப்படியான கேள்வியைக கேட்டுவிட்டார். திரு. அம்பிகைபாகன் அப்படிக் கேட்ட பத்திரிகையைப்பற்றி ஒரு சொல்தானும் சொல்லாமல் வேறு இரு தமிழ்ப் பத்திரிகைகளின் பெயர்களைச் சொன்னார் என அறிகிறேன். ஆனால், அந்தப் பத்திரிகையாளர் நேர்மையாக நடந்து தமக்குரிய புகழை ஈட்டிக்கொண்டார். அவர் வாழ்க! புத்தகங்களைப்பற்றி அவர் கூறியது இது:- "ஆராய்ச்சி நூல்களுக்குள் தமிழர் பண்பாடும், கவிதையில் மலரும் மாலையும், சிறுகதையில் நொண்டிக்கிளியும், விஞ்ஞானத்தில் பத்துமாதமும், அரசியலில் கார்ல் மாக்ஸும் (வெ. சாமிநாத சர்மா) சிறந்தன.

அவருடன் நட்புரிமை பூண்ட எழுத்தாளர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். தற்காலத் தமிழ்நூலாசிரியர்கள் என்ற இலங்கை வானொலிப் பேச்சொன்றிற்கு மறுப்பாக அவர் எழுதிய கட்டுரை ஒன்றிலே கல்கி, நாமக்கல் கவிஞர், இன்னும் சிலரைப்பற்றியெல்லாம் வானளாவப் புகழ்ந்திருக்கிறார். ஆனால் அபிப்பிராயம் சொல்லும்போது வெட்டு ஒன்று துண்டு இரண்டெனும்படி கூறிய அவரின் நேர்மையைப் பாராட்டத்தான் வேண்டும். அவரின் அபிப்பிராய நேர்மையைப்பற்றி இன்னும் ஒன்றைச் சுட்டிக்காட்டாமல்விட முடியவில்லை. இலக்கியச் சிந்தனைகள், தமிழின் மறுமலர்ச்சி, என் சரித்திரம் முதலிய நல்ல நூல்களுக்கு அவர் விமர்சனம் செய்திருக்கிறார். தமிழ்த் தாத்தா சாமிநாதையர் அவர்களது என் சரித்திரம் என்ற நூலுக்கு அவர் எழுதியிருப்பதைப் பாருங்கள்:-

"தாமோதரம்பிள்ளையைப்பற்றி ஐயர் அவர்கள் எழுதியிருப்பது ஐயர் அவர்களுடைய கௌரவத்துக்குத் தக்கதாகக் காணப்படவில்லை. முன்னுக்குப் பின் முரணுகவும் காணப்படுகின்றன. தாமோதரம்பிள்ளையினதும் ஐயரவர்களினதும் தராதரங்களைச் செவ்வனே அறிய விரும்புவோர் திரு. வையாபுரிப்பிள்ளை அவர்கள் எழுதிய தமிழ்ச் சுடர் மணிகள் என்ற நூலைப் படிக்கவும்." ஐயர் அவர்களின் அபிப்பிராயத்தை அம்பிகைபாகன் அவர்கள் ஆதரிக்காவிடினும், அவர்களின் தமிழ்த் தொண்டை என்றுமே போற்றி வந்திருக்கிறார். போற்றியது மாத்திரமல்ல சாமிநாதையர் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாக நடாத்தியும் முடித்தார்.

நாவலரும் பொதுசனசேவையும், திருவள்ளுவரும் அறமும், இராம கிருஷ்ணரும் சைவ நாயன்மார்களும், பகவத்கீதையும் பெரிய புராணமும், மாணவரும் தமிழிலக்கியமும், இராஜாஜி காட்டும் கல்விமுறை, திருமுறைகளின் சிறப்பு, இரு காதற்காட்சிகள், நகுலேஸ்வரம் என்பன அவர் எழுதிய கட்டுரைகளிற் சில. இவற்றுள் இரு காதற்காட்சிகள் என்ற கட்டுரை மிகவும் சிறந்தது. கம்பனது இராமாயணக் காட்சி ஒன்றோடு ஷேக்ஸ்பியரின் ஒரு காதற் காட்சியை ஒப்பிட்டுக் கம்பனை ஒருபடி தூக்கி வைத்திருக்கிறார் அவர். ஆசிரியர் பேரின்பநாயகன், எச். எஸ். பெரேரா, நற்பெரியார் பாலசிங்கம், ஈழத்துப் பெருமகன் அருணாசலம், முத்தமிழ் முழக்கம் செய்த வித்தகர் சண்முகம் செட்டியார்' சுத்தானந்தர், குற்றால முனிவர் டி. கே. சி. அமரர், கல்கி, ஈழகேசரியின் தந்தை நா. பொன்னையா ஆகியவர்களைப் பற்றியெல்லாம் அவர்கள் குணநலம் விளங்க அருமை

(தொடர்ச்சி 12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுக் கதை : எழுதியவர் : செல்வி எஸ். தியாகராஜா

# அன்பின் சிகரம்

10-4-55இன் தொடர்ச்சி

பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் தலைமை வகிப்பதற்காக அன்று ஸ்ரீதரன் மேடையில் அமர்ந்திருந்தான். "ஆகா! என்ன கம்பீரம், என்ன சாந்தம்" என்று தூர இருந்து வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள் மீரா. அவன் பேசியதெதுவும் அவள் காதுகளில் விழவில்லை. சபையில் எழுந்த கரகோஷம்தான் அவனது பேச்சுத் திறனை அவளுக்குக் காட்டிக்கொண்டிருந்தது. வர்தனம் கூறவேண்டிய பொறுப்பு அவளுக்கு அளிக்கப்பட்டு இருந்தது. மேடையை விட்டு இறங்கியதும் ஸ்ரீதரன் "மீரா!.......நீ இங்கேயா இப்பொழுது இருக்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டே அவளருகே வந்தான். காணாததைக் கண்ட பெருமை அவள் கண்ணில் மிளிர்ந்தது. "இப்பொழுது பேசுவது சரியல்ல ........சனிக்கிழமை உன்னைப் பார்க்க வருகிறேன்" என்று கூறிவிட்டுமறைந்துவிட்டான்.

மீராவால் அன்று பெற்ற ஆனந்தத்தைத் தாங்க முடியவில்லை. இதுவரை எதற்காக ஏங்கினாளோ அது கிடைத்துவிட்டது. யாரைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தால் இரவு பகல் தூக்கத்தை இழந்தாளோ, அவன் அவளைக் காண வரப்போகிறான். ஆனால்......? இந்த ஆனால் என்பதே வாழ்க்கையில் குறுக்கிடாவிட்டால். ஸ்ரீதரனோ அவனது பெற்றோருக்கு ஒரே பிள்ளை; ஒரே ஒரு ஊன்றுகோல். மீராவோ ஏழை. சாதியையே பெரிதென மதிக்கும் இந்த உலகில் ஸ்ரீதரனுக்கும் அவளுக்கும் உள்ள வேற்றுமை எத்தகையது!

சனிக்கிழமை, பையன் வந்து, "உங்களைப் பார்க்க ஒருவர் வந்திருக்கிறார் அம்மா" என்று கூறுமளவும் அவள் மனப்போராட்டம் வளர்ந்துகொண்டே இருந்தது. படபடக்கும் நெஞ்சைக் கைகளால் தடவிக் கொடுத்தாள். அஞ்சி நடுங்கி இறக்கையை அடிக்கும் மாடப் புறாவை அன்புடன் தடவிப் "பயப்படாதே" என்று கூறுவதுபோல் இருந்தது அவள் செய்கை.

"மீரா" ஆசையையும் அன்பையும் ஒன்றுசேர்த்து அழைத்தான் ஸ்ரீதரன்.

ஐந்துவருஷங்களாகத் தூசி படிந்து கேட்பார் அற்றுக் கிடந்த அவள் இதய வீணையைச் சுருதி கூட்டி மீட்டிவிட்டன இச் சொற்கள். அந்த இனிமை அவள் உடலெல்லாம் பரவிற்று. சளசள என்று நிமிஷத்துக்கு நூறு வார்த்தைகள் அவனுடன் பேசி மகிழும் மீராவால் இன்று ஒரு சொல்லேனும் பேச முடியவில்லை.

"ஏன் மீரா! நான் வந்ததில் உனக்கிஷ்டமில்லையா? அப்படியானால் இதோ போய்விடுகிறேன்."

"............"

"போகட்டுமா?"

"இதய வீணையை மீட்டிவிட்டாயே. வா, வா, வா" என்று அவள் காதுகளில் பாடவேண்டும்போல் இருந்தது. ஆனால் சிரமப்பட்டு "வேண்டாம்" என்ற வார்த்தை வெளிவந்தது.

"அப்பாடா இந்த ஒரு சொல்லே எவ்வளவு இனிமையாக இருக்கிறது. எங்கே என்னை மறந்துவிடுவாயோ என்று அஞ்சினேன். நான் வந்ததில் உனக்குத் திருப்திதானே?"

"சண்பக மலரின் நறுமணத்தை விரும்பாதவர் உண்டா?"

"நறுமணம் கூடத் தெவிட்டுவது உண்டு."

"எப்பொழுது?" அவள் கண்கள் அவனை உற்று நோக்கின.

"மலர் வாடியவுடன், அன்புத் தழை வாடியதும், மனிதரும் தூர நிறுத்தப்படுகிறார்கள்." இதைக் கூறும்போது ஸ்ரீதரனின் கண்ணில் லேசாகச் சோகத்திரை படர்ந்ததை மீரா கவனித்தாள்.

"வற்றுவதற்கு அன்பு குளத்து நீர் அல்லவே. அது ஆழ் கடல் நீர் போன்றது."

"நீரைப் பார்த்தால் மாத்திரம் தாகம் தணிந்துவிடாது. பருகினால்தான் தணியும்."

"மீராவால் பதில் சொல்ல முடியவில்லை. அன்பு, தியாகம் என்ற கத்திரியின் இருமுனைக்கிடையே அகப்பட்டுத் தத்தளித்தாள். ஸ்ரீதரன் கண்களே அவன் என்ன கேட்க விரும்புகிறான் என்பதை அவளுக்கு உணர்த்தின. அவன் அன்பைப் பருகவேண்டும், அதில் மூழ்கவேண்டும் என்றது அவள் காதல் மனம். "பாதகி அவன் வாழ்வைப் பாழாக்காதே. அவன் உயர்வு எங்கே, உன் தாழ்வு எங்கே. அருமையாகப் பூத்த ஒரே ஒரு ரோஜா மலரை அதன் செடியில் இருந்து கிள்ளிவிடாதே" என்றது தியாக சிந்தை.

"வாழ்க்கை சண்பக மரத்தைப் போன்றது. அதில் இலைகள் இருந்தால் பூக்களைப் பார்க்க முடியாது. பூத்துக் குலுங்கும்பொழுது ஓர் இலையையேனும் பார்க்கமுடியாது. வாழ்வும் அத்தகையதே. இன்பத்திற்கும் இலட்சியத்திற்கும் அதில் இடமில்லை. இன்பமிருந்தால் இலட்சியமில்லை. இலட்சியவாதி இன்பத்தைக்காண முடியாது."

"நீ கூறுவது எனக்கு விளங்கவில்லையே. மீரா!"

"தாங்கள் இலட்சியம் நிறைந்தவர். தங்கள் பெற்றோர் சொல்லை மீறுவது இலட்சியவாதிக்கழகல்ல. பெரும் இலட்சியத்திற்காகச் சிறு இன்பத்தைத் தியாகம் செய்வது கடினமா?"

"சிறு இன்பமா மீரா? நீ அப்படியா கருதுகிறாய்?"

"............"

"மீரா! சகோரப் பட்சி இலட்சியமென்று கருதி நீர்த் துளியை மறந்தால் அதன் முடிவு? நாவுலர்ந்து வாடி மடியவேண்டியதுதான்."

"தங்கள் பெற்றோர் முடிவைத் தாங்கள் விரும்புகிறீர்களா?"

"ஞான சாதிப்பற்றைக் கைவிட்டால் அவர்களும் இன்புறலாமே? உலகை வாழவைக்கும் அன்பைக் கொன்று உபயோகமற்ற சாதியை வளர்ப்பதின் பயன்?"

"இலட்சியமென்பது உங்களுக்குமாத்திரம் சொந்தமல்ல, உலகில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இலட்சியம் உண்டு. உங்கள் இலட்சியம் உங்கட்கு. அவர்கள் இலட்சியம் அவர்கட்கு."

"நீ கூறுவதுதான் என்ன?"

"மீரா! இனி உங்கள் தங்கை......."

ஸ்ரீதரன் ஒருகணம் அப்படியே ஸ்தம்பித்து நின்றான். அவன் இதயமே நின்றுவிட்டதுபோன்ற உணர்ச்சி மேலிட்டது. நிலத்தில் விழுந்து சிதறிக் கிடக்கும் கண்ணாடித் துண்டுகளைப் பெரிய விஞ்ஞானியாலும் அப்படியே பொருத்த முடியுமா? ஸ்ரீயின் உள்ளம் வெடித்துத் துண்டானது.

"மீரா வீண் பிடிவாதம் செய்கிறாய். இதனால் என் பெற்றோரின் வாழ்வையும் என் வாழ்வையும் பாழாக்குவதன்றி வேறு பயன் எதுவுமில்லை."

பொங்கிவரும் துக்கத்தைச் சகிக்கமாட்டாது மீரா பற்களால் உதட்டைக் கடித்துக் கொண்டாள். அவள் கை சுவரை ஆதாரமாகப் பிடித்துக்கொண்டது. "நான் போய் வருகிறேன்; உங்கள் பெற்றோர் மனம் குளிர இன்ப வாழ்வு கொள்ளுங்கள்" என்று கூறிக்கொண்டே ஓட்டமாகத் தன் அறைக்குட் சென்றுவிட்டாள்.

"என்னை இனிப் பார்க்க முயலவேண்டாம். இரு துருவங்கள் ஒன்று சேர்வதென்பது இன்றைய உலகில் அசாத்தியம். தங்கள் இன்ப வாழ்வை நான் தூர இருந்து பார்த்து ஆனந்தமடைய விரும்புகிறேனே ஒழிய அதிற் புகுந்து அதைக் கவிழ்க்க முயலமாட்டேன்.

என்றும் தங்கள்
மீரா

* * *

கையில் இருந்த கடிதத்தை மீண்டும் மீண்டும் படித்தான் ஸ்ரீதரன். அவன் கண்கள் கண்ணீரால் நிறைந்தன. அளவிற்கு மிஞ்சிய உழைப்பும், உடைந்த உள்ளமும் அவனது தேக நிலையைப் பரிதாபமாக்கின, அவன் நிலை பயத்தைக் கொடுத்தது, அவன் பெற்றோருக்கு. எப்படியாவது விவாகம் முடிந்தால் எல்லாம் சரியாய்விடும் என்ற எண்ணத்துடன் அவனை அதட்டியும் மிரட்டியும் பார்த்தனர். ஒன்றும் பயனளிக்கவில்லை. காத்திருந்த, அத்தை மகளைப் பணக்காரனுக்குக் கொடுத்துவிட்டாள். கள்ளச் சந்தையிற் பணம் சேர்த்த எத்தனையோ சாதிமான்களுடைய புத்தம் புதிய கார்கள் அவன் வீட்டு வாயிலில் தவம் செய்தன. "மீரா ஒருத்திதான் என் மனைவி" என்ற அவன் பிடிவாதத்தைச் சிறிதும் தளர்த்த முடியவில்லை. "மீரா வீட்டிற் காலை வைத்தால் அவன் காலை முறித்துவிடுவேன்" என்று குமுறிய தந்தையின் காலமும் முடிந்தது. இரு உள்ளங்களைப் பிரித்து வேடிக்கை பார்த்த ஒருசாதிமான் உலகில் இருந்து மறைந்தார். சாதியே பெரிதென எண்ணி இறுமாந்திருந்த லக்ஷ்மியம்மாளுக்குக் கசத்தினுல் தேய்ந்துகொண்டிருந்த தன் மகனைப் பராமரிக்கத்தான் நேரம் சரியாக இருந்தது.

"மீரா நீ எங்கிருந்தாலும் இதைப் படித்ததும் என்னை ஒருமுறை வந்து பார்க்காவிட்டால் என் உயிர் கூண்டில் இருந்து விடுதலைபெறாது துடித்துக்கொண்டிருக்கும்." புதினத்தாளில் இருந்த இந்த வரியிலேயே மீரா கண்கள் பதிந்திருந்தன. தன் வேலையையும் விட்டுவிட்டு அந்தக் கிராமத்தில் ஒரு மூலையில் அவள் பதுங்கி இருந்தாள். எவருடைய வாழ்வு தழைக்க வேண்டுமென்று அவள் தன் இதயத்தையே கசக்கிப் பிழிந்தாளோ, எவன் அன்பின் சிகரமாக அவள் உள்ளத்தில் நிறைந்திருந்தானோ, அவனைக் காண விரைந்து சென்றாள் மீரா.

மேசையில் இருந்து நறுமணம் பரப்பிய ஊதுபத்தி கொஞ்சம் கொஞ்சமாக எரிந்து அவியும் தறுவாயில் இருந்தது. அதைப் பார்த்த மீரா திடுக்கிட்டாள்...தியாக மணத்தைத் திசையெல்லாம் பரப்பிய ஸ்ரீதரனும்......

அன்புடன் அவன் கேசத்தை இலேசாகக் கோதிவிட்டாள். மிகுந்த சிரமத்துடன் பேசினான் ஸ்ரீ.

"மீரா! நீ எப்படியாவது வருவாய் என்பது தெரியும். ........அப்பா, இன்றுதான் என்மனம் சாந்தி அடைந்தது" அவள் கைகளைப்பற்றி வருடியபடியே கூறினான்.

"மனதை வீணே அலைக்காதீர்கள். எல்லாம் சரியாய்ப் போய்விடும்........"

ஸ்ரீதரன் சிரித்தான். "ஏன் மீரா! வீணாக உன்னையே ஏமாற்றிக்கொள்கிறாய்? ... அன்று நீ 'என்னை மறந்துவிடுங்கள்' என்று கூறாதிருந்தால் இன்று என் நிலை இதுவல்ல. உன் அன்பென்னும் ஊற்று வற்றியதும் என் மனமே பாலைவனமாக மாறிவிட்டது. எல்லாம் அப்பாவின் சாதிப்பற்று..."

மீரா அவன் வாயில் சிறிது பாலை விட்டாள், அவன் முகம் பிரகாசம் அடைந்தது. "ஐஸ் கிரீமைக் கையில் வைத்துப் பார்த்துக்கொண்டே இருப்பதில் திருப்தி அடைகிறான் பேராசைக் குழந்தை. சாப்பிட்டால் முடிந்து விடுமே என்ற பயம். ஆனால் வெய்யிலில் உருகி அது நிலத்தில் சிந்துவதை அவன் கவனிப்பதில்லை. அப்பாவின் பேராசையும் என் வாழ்வை இப்படித்தான் வீணே நிலத்தில் சிந்திற்று—சாதி என்ற பேய், பணம் என்ற பூதம். எங்கள் வாழ்வில் ஆடிய கோரத்தாண்டவமே, இன்று நாங்கள் இருக்கும் நிலைக்குக் காரணம்... எம்மைப் பிரித்த இந்தச் சமூகத்தின் கெடுபிடியில் இருந்து உன் சகோதரிகளையேனும் காப்பாற்று......இதுவே உன் வாழ்வின் இலட்சியமாக இருக்கவேண்டும்!"

மீராவையே பார்த்துக்கொண்டிருந்த அவன் கண்கள் மங்கின.

வீடு வீடாகச்சென்று நிதி திரட்டி நடனக் கச்சேரிகள் வைத்துப் பொருள் திரட்டி 'ஸ்ரீதர பவனத்தை' உருவாக்கினாள் அவள். அங்கு சாதியில்லை, மதமில்லை, ஏழையில்லை, பணக்காரன் இல்லை. ஸ்ரீதரன் எதை விரும்பினானோ அதை அவள் நிலைநிறுத்தினாள்.

கடிகாரம் 4 தரம் அடித்து ஓய்ந்தது. திடுக்கிட்டுக் கண் விழித்தாள் மீரா. அவள் வாழ்க்கையும் இன்று இந்தக் கடிகாரத்தைப் போன்றதே. பகல் என்று அது ஓடுவதும் இல்லை. இரவு என்று அது தன் வேலையைத் தளர்த்துவதும் இல்லை.

தூய வெள்ளை உடை அணிந்து ஸ்ரீதரனின் படத்திற்கு முன் கைகுவித்து வணங்கினாள். ஊதுபத்தி எரிந்து எரிந்து தன் மணத்தைப் பரப்பிக்கொண்டிருந்தது. பளிச்சென்ற அவன் படத்தை அலங்கரித்த முல்லை மலரின் மணம் அறை முழுவதும் பரவியது.


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம்

ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப் பணம் கட்டுமுறை :

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு :

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம் :

க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்த ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள் :

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன் :

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[A61]

வேலணையில் நடைபெற்ற திருமுறைவிழாவில் திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் திருவாசகம் என்ற பொருள்பற்றிப் பேசியதன் சுருக்கம் இது.

# தித்திக்கும் திருவாசகம்

## மணிவாசகர்மீது அடிகளாரின் பெரும் பற்று



திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார்

திருவாசகத்தை அருளிய மாணிக்கவாசகர் நாம் செய்த தவத்தால் நம்மிடையே வந்து உதித்தனர். சிவன் திருமால் ஆகியோரின் வருகை எவ்வகையாகக் கருதப்படுகின்றதோ அதேபோன்றதே மாணிக்கவாசகரின் தோற்றமுமாகும். அவர் கவிதை நாடு மொழி யென்ற கட்டுப்பாடின்றி எல்லையற்று விளங்குகின்றது. அந்தத் தவத்திரு நாலை ஞானப்பனுவல் என்று சொல்லலாம்.

இந்த விழாவில் நால்வரின் சரித்திரத்தைப்பற்றிப் பேசிய ஒவ்வொருவரும் தாம் தாம் எடுத்துக்கொண்ட நாயன்மார்கள்தான் தலைசிறந்தவர்கள் என்று வாதித்தார்கள். ஆனால் நான் அந்த நால்வருள்ளும் மாணிக்கவாசகர்தான் தலைசிறந்தவரென்று வற்புறுத்திக் கூறுவேன். இந்த உண்மையை மறுக்க முயலுவோர் தம் நெஞ்சின்மீது கையைவைத்து மனச்சாட்சிப்படி சொல்லட்டும். திருவாசகம் தித்திக்கும் செந்தமிழ்நூல் தேனூறும் திருவாசகப் பாடல்களைக் கேட்டு இறைவனே இன்புற்றானென்றால் அதன் பெருமையை மேலும் சொல்லவேண்டியதில்லை. தமிழிலே ஒரு பெரும் மாற்றத்தை உண்டாக்கிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தமது நூலுக்குப் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்திலே ஏனைய தமிழ் நூல்கள் யாவற்றையும் ஒரு தாழிசையிலே அடக்கிவிட்டார். ஆனால் திருவாசகத்துக்கு மட்டும் இரு தாழிசைகளை ஒதுக்கியிருக்கின்றார். இதுவே அந்த நூலின் உயர்ச்சிக்குப் போதிய சான்றாகும்.

இறைவன் தனிமையாய் இருக்கவேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டபோது திருவாசகத்தைமட்டும் தம்முடன் எடுத்துச் சென்றார். கடையூழிக்காலத்தில் வரும் பெரும் வெள்ளம் அந்த நூலையும் அடித்துச் செல்லாமல் இருக்கவே இறைவன் அப்படிச் செய்திருக்கவேண்டும். நான் பல பிறமொழி இலக்கியங்களையும் படித்திருக்கின்றேன். ஹோமர், மில்டன் முதலான மேனாட்டு அறிஞர்களின் நூல்களையும் வாசித்திருக்கின்றேன். ஆனால் என் நெஞ்சைத் தொட்டது திருவாசகம் ஒன்றுதான். மனத்துக்கண் மாசிலனாதல் என்ற பெருவாழ்வு அதைப் படிப்பதாற் கிட்டும். சைவ மக்களைக் கிறிஸ்தவர்களாக்குவேன் என்ற சபதத்துடன் வந்தப்போப்ஐயரை பைபிளை மறக்கச் செய்ததும் திருவாசகம்தான். முதலில் அதனை எதிர்ப்பதற்காகத்தான் அதனை ஆராய்ந்து படித்தாரோ தெரியவில்லை. திருவாசகத்திலே மனதைப் பறிகொடுத்த போப் ஐயர் அது தமிழ்நாட்டில் ஒவ்வொருவர் உதட்டிலும் உலவும் நூல் என்று ஒரு சந்தர்ப்பத்திற் குறிப்பிட்டுள்ளார். ஆங்கிலம் பேசும் போப் ஐயர் இரசித்தார் என்பதற்காக மட்டுமல்ல அது இனத்தால் மொழியால் பண்பாட்டால் ஞானத்தால் மற்றெந்த நூல்களையும் விடச் சிறந்துவிளங்குகின்றது. அதனைப் பக்திப் பெருக்குடன் பாடினால்தான் இரசிக்கமுடியும்.

திருவாசகத்துக்கு இவ்வளவு பெருமை இருப்பதற்குக் காரணம் அதன் சில தனித் தகுதிகளேயாகும். திருநாவுக்கரசரால் கூட அத்தகுதிகளைப் பின்பற்ற முடியவில்லை. ஆண்டவனை முன்னிலைப்படுத்தி முறையிடுகின்ற காட்சி திருவாசகம் ஒன்றுக்கே உரியது.

இந்த நூலுக்குப் பல பெரியார்கள் உரை எழுதியிருக்கின்றனர். அவற்றில் சில உரைகள் மூலத்தின் கருத்தையே மறைக்கக் கூடியனவாய் இருக்கின்றன. சில பெரியார்கள் திருவாசகத்துக்கு உரை எதற்கென எழுத மறுத்ததுமுண்டு. இச்சமயத்தில் மகாவித்துவான் தியாகராசச் செட்டியாரை யான் நினைக்கின்றேன். திருவாசகம் அநுபவத்தின் வாயிலாக எழுந்த பாட்டு, அன்பின் விளைவு. உரை எழுத வேண்டிய அவசியமே இல்லை. உரை யெழுதும்படி வற்புறுத்தினால் உயிர் துறப்பேன் என்றார் செட்டியார். இன்று மூல ஆசிரியரை மட்டுமல்ல மூலக் கருத்துக்களைக் கூட மறைக்கு மளவுக்கும் உரைகள் பெருகிவிட்டன. இந்த நூலுக்குச் சமீபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நவநீத கிருஷ்ண பாரதியாரும் உரையெழுதியிருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

வாழ்க்கையை ஒரு பெரிய சமுத்திரமாகவே எல்லாரும் கருதுகின்றார்கள். இதே கருத்துத்தான் மாணிக்கவாசகருக்குமுண்டு. இந்தப் பிறவிப்பெருங் கடலை அதாவது வாழ்க்கையின் இன்ப துன்பங்களுக்கு அகப்படாமல் கடலைக் கடப்பதற்கு திருவாசகம் தெப்பமாக உதவுகின்றது. ஐந்தெழுத்தின் உதவியுடனும் பிறவிப்பெருங் கடலை நீந்தலாம். அதைப்பின்பற்ற இயலாதவர்கள் திருவாசகத்தின் உதவியை நாடலாம்.

'நாமார்க்கும் குடியல்லோம்......' என்று பாடிய அந்தப்பெருந்தகை ஒரேயொரு இடத்தில் மட்டும் அஞ்சுகின்றார். கடவுளை வாழ்த்தி வணங்காதவர்களைக் கண்டால் அஞ்சுவேன் என்று சொல்லுமவர் நாஸ்திகர்களிடத்தில் அதிக பயமுடையவரென்று அறியக்கிடக்கின்றது.

திருவுருவங்களை கற்கள் என்று சொல்பவருமுண்டு. அது அவற்றின் தத்துவங்களை உணராதோர் கூற்று. உதாரணமாகச் சொல்லப்போனால் கடையிலே இருந்து வாங்கிய சேலை தையற்காரனிடம் சென்று திரும்பும்போது சட்டையென்ற பெயரைப் பெறுகின்றது. அதேபோல் ஆக்கியோரின் திறமைக்கேற்ப கல்லானது கடவுளாகவும் சிலையாகவும் மாறுகின்றது. இதை மாணிக்கவாசகர் "இது அவன் திருவுரு இவன் அவன் எனவே ......" என்று கூறுகின்றார்.

மாணிக்கவாசகர் தம்மை இறைவனிடம் அர்ப்பணித்தபடியினால் தான் சோமசுந்தரப் பெருமான் அவருக்காக மண் சுமந்தார். அப்படிச் செய்திராவிட்டால் திருவையாற்றங்கரையிலே இறைவனைக் கண்டிருக்க முடியாது.

திருவாசகத்தை ஓதினால் மெய்ஞ்ஞானப் பயிர் விளைந்து உயிர்கள் வாழும். சிவ பூசை செய்வதின் பயன் கிட்டும். புறவாழ்வுக்குத் திருக்குறளும் அகவாழ்வுக்குத் திருவாசகமும் வழிகாட்டுகின்றன. மாணிக்கவாசகம் கண்ட கோயில் இன்று தமிழுலகத்தில் ஒன்றுமேயில்லை. இப்போது ஆலயங்கள் யாவும் பணம் பறிக்கு மிடங்களாகவே விளங்குகின்றன. மாணிக்கவாசகர் கண்ட முறைப்படி ஈழத்தில் ஒரு கோயிலாவது அமைக்க முயற்சி செய்யுங்கள். அப்படிச் செய்ய முதலில் மனித எண்ணம் மாற்றமடையவேண்டும்.' தமிழகத்து ஆலயங்கள் இறைவனின் ஆபரணங்கள் களவு போகாமற் காப்பாற்றுவதற்காக என்றும் பூட்டப்பட்டுக் கிடக்கின்றன. மனதை ஒருவழிப்படுத்தி தன்னிலை அடையச்செய்வதற்காக அமைக்கப்பட்ட அந்த ஆலயங்கள் இன்று வியாபார ஸ்தலங்களாகக் காட்சியளிக்கின்றன. இறைவனைப் பூசிப்பதற்கு ஓரணா இரண்டணா என்ற பேரமபேசப்படுவதால் மனதில் பக்தி தோன்றுவதற்கு அங்கு இடமேயில்லை. இந்தநிலையில் மாற்றமும் பண்பாடும் ஏற்படாதவரை ஆலயத்துக்குப் போவதிலும்பார்க்கப்போகாமல் விடுதலே நல்லது, அங்கு போனால் மனம் மாறவேண்டுமென்று மாணிக்கவாசகரே ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளார். அத்தகைய நிலையை எதிர்காலத்திலாவது தமிழகம் காணுமா?

# அப்பரின் அன்புநெறி

— க. இராமச்சந்திரன் —

வேலணை திருமுறை விழாவில் திரு. க. இராமச்சந்திரன் ஆற்றிய விரிவுரையின் சாரம் வருமாறு:

எண்ணரிய சிவானந்த ஞானவடிவாகிய நாவுக்கரசர் சிவத்திற்கலந்த புண்ணிய வேளையில் இப்புனித விழாவிற் கலந்துகொள்ளக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

அப்பர் சுவாமிகளின் பிரதிநிதியாக இங்கு வந்திருக்கும் அடிகளார் இந்த ஊரில் அழைக்கப்பட்ட குதூகலமான காட்சிகள் நமது உள்ளங்களையும் கண்களையும் குளிர்ச்சி செய்தன. இற்றைக்கு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்குமுன் தென்னாட்டில் நடந்த சில அற்புத நிகழ்ச்சிகளை நினைவூட்டின.

நாமெல்லோரும் பாசக்கடல் கடந்து பரமசாந்தத்துறை சேரவேண்டுமென்ற பரந்த நோக்குடன் பல்லாயிரக்கணக்கான பாசுரங்களை அருளிய தாண்டக வேந்தர் கல்லைக் கட்டுமரமாகக் கொண்டு கடலை நீந்தித் திருப்பாதிரியூர்க் கடற்கரையேறிப் பதிகம் பாடிவிட்டு திரும்பவும் திருவதிகை சேர்ந்தனர். பெருமகிழ்ச்சியுடன் அவரை அவர்கள் வரவேற்றனர். அவர்களை அப்பொழுது கண்டின்புற்ற சேக்கிழார் பெருமான்

தூய வெண்ணீறு துதைந்த பொன்
    மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு
    சிந்தையும் நைந்துருகி
பாய்வது போலன்பு நீர்பொழி
    கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்
    புகுந்தனர் வீதியுள்ளே.

என்று படம்பிடித்து அழகாக நமக்குக் காட்டுகிறார். அதே விதமான உருக்கமான காட்சியையேஇங்கு நாம் காணப்பெற்றோம்.

உயிரனைத்தும் சிவனது அடிமைகள். அடிமைகள் எப்படி எசமானுக்கு உரிமையாகிவிடுகின்றனவோ அதே போல இவ்வுலகில் பொருள்கள் யாவும் சிவனுக்கே சொந்தமானவை. இது மறுக்கமுடியாத உண்மையென உணர்ந்து வாழ்பவர்களே மெய்யடியார்கள் என்கிறார் கச்சியப்பர். சைவ உலகில் இந்த இலக்கணத்திற்கு முற்றிலும் பொருந்த இன்று எவராவது உளரெனின் அவர் குன்றக்குடி அடிகளார் ஒருவரே எனத் தயங்காது கூறலாம். இது வெறும் புகழ்ச்சியல்ல. நாம் நேரிற் காண உடல் கொண்டுலவும் உத்தமர்களை, அதாவது மனித வாழ்க்கையாம் கண்ணாடியில் தெய்வீக வாழ்க்கையின் பிரதிபிம்பமாக விளங்கும் மகாத்மாக்களை, உண்மையன்புடனும் பூரண விசுவாசத்துடனும் வணங்கத் தயங்குவோமாயின் அப்பர் சம்பந்தர் குருபூசைகளைச் செய்வதாலோ அவர்கள் தேவாரங்களைப் பயில்வதாலோ அணுவேனும் ஆத்மலாபம் பெறமாட்டோம். "மாலற நேயம் மலிந்தவர் வேடமும், ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" என்று சித்தாந்தம் பேசுதல் ஏட்டுச் சுரைக்காயாகும்.

சைவ மணிவிளக்கான தாண்டக வேந்தர் திருமுனைப்பாடிநாட்டைச் சேர்ந்த திருவாமூரில் மருணீக்கியார் என்ற பிள்ளைத் திருநாமத்துடன் பிறந்ததும், [illegible]கரசரென்னும் [illegible]

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம் பார்க்க)

# நாளும் வளர்ந்துவரும் 'ஈழகேசரி'

## குன்றக்குடி அடிகளாரின் ஆசி

## கீழ்த்திசை நாடுகளிலும் 'கேசரி'யின் சேவை

ஈழகேசரிப் பத்திரிகையைக் கடந்த சில ஆண்டுகளாகப் படித்து வருகின்றோம். தமிழினத்தின் கலை, மொழி, நாகரிகம், சமயம் முதலிய பல துறைகளிலும் ஈழகேசரி செய்து வருகின்ற சேவை பாராட்டுதற்குரியது. அதோடு இன்றைய இருபதாம் நூற்றாண்டுப் புதுமைக் கொள்கைகளிலும் பழமைக்கு மாறுபடாதனவற்றிலும் ஈழகேசரி சிறந்து விளங்குகின்றது. முன்னைப் பழமைப் பண்பாட்டைப் பேணுவதிலும் இடையிடையே போலிகளைக் களைவதிலும், பின்னைப் புதுமை நலங்களை ஏற்றுக்கொள்வதிலும் தமிழ் மக்களுக்கு நல்ல முறையிற் சேவை செய்வது ஈழகேசரி என்று கூறினால் அது மிகையாகாது. மேலும் இந்தியாவிற்கும் ஈழத்திற்கும் இடையே உள்ள கலாச்சாரத் தொடர்பைத் தனது கருத்துக்களின்மூலம் ஈழகேசரி உறுதிப்படுத்துகின்றது. தமிழன்பர்கள் வசிக்கும் இடங்களுக்கெல்லாம் ஈழகேசரி செல்லுவதைக் கீழ்த்திசை நாடுகளிற் செய்த சுற்றுப் பிரயாணத்தின்போது தெரிந்து கொண்டோம். இத்தகு நல்லியல்புகள் பலவும் பெற்று நாளும் வளர்ந்து வரும் ஈழகேசரிக்கு நண்பர் அரியரத்தினம் அவர்கள் ஆசிரியராக வாய்த்திருப்பது சாலவும் பொருத்தமுடைத்து.

இப் பத்திரிகையைத் தோற்றுவித்த தமிழ்ச் செல்வர் திரு. நா. பொன்னையா அவர்களுடைய ஆத்மா ஈழகேசரியின் வளர்ச்சியைக் கண்டு சாந்தியடையும் என்று எதிர்பார்க்கின்றோம். தமிழினமும் தமிழ்க்கலையும் வாழும் வரையில் ஈழகேசரியும் [illegible] வாழ்த்துகின்றோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னாகம், மன்மத சித். ௧௧
— கசரி ஆண்டு 86 —
பேகசக்தி இல. 805


## பாண்டுங் மகாநாடு

பாண்டுங் மகாநாடு செய்யும் முடிபுகளை மேற்றிசை வல்லரசுகள் ஏற்றாலென்ன, உதாசீனம் செய்தாலென்ன, ஒன்றுமட்டும் நிச்சயமாகிவிட்டது. ஆசிய ஆபிரிக்க நாடுகளிடையே ஏற்பட்டுள்ள புத்துணர்ச்சியை இனி எந்த வல்லரசும் ஒடுக்க முடியாதென்பதே அவ்வுண்மையாகும். அத்துடன் இன்னொரு பேருண்மையையும் மேனாட்டினர் உணர்ந்திருப்பார்கள். ஐக்கிய நாடுகள் சங்கம் தனது நோக்கத்தை நிறைவேற்றாது, ஆசிய ஆபிரிக்க நாட்டு மக்களின் அதிருப்திக்குப் பாத்திரமாகி விட்டதையுமே இங்கு குறிப்பிடுகின்றோம். ஐக்கிய நாடுகள் சங்கத்தின் சாசனம் பரிசீலனை செய்யப் பெற்றுத் திருத்தி அமைக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. நீதியையும் தர்மத்தையும் பற்றி இப்படி நாம்குறிப்பிடவில்லை. ஆசிய ஆபிரிக்க நாடுகளிற் பரவிவரும் புதிய சுதந்திரப் பேருணர்ச்சி வலுப்பெற்று வருவதையே இங்கு அழுத்திக்கூற விரும்புகின்றோம். கண்முன் நிகழ்ந்துவரும் இக் காட்சியைக் கண்டு அதற்கேற்றவாறு தமது போக்குகளை மாற்றிக்கொள்ள மேனாட்டு வல்லரசினர் பின்னிற்பார்களாயின் அதனால் அனைத்துலகிற்கும் ஏற்படவிருக்கும் அனர்த்தங்களை அவர்கள் உணர மறுக்கின்றனர் என்றே கூறவேண்டும்.

வாளை உருவுவோன் அவ்வாளாலேயே மடிகின்றான் என்ற மூதுரையை ஆசிய நாடுகளின் மாபெருந் தலைவர்களில் ஒருவரான நேரு பெருமகனார் நினைவூட்டி, அணுக்குண்டை நம்பியிருப்போர் அந்த அணுக்குண்டினாலேயே தமது அழிவைத் தேடுவர் என எச்சரிக்கை செய்திருப்பதை இத்தருணத்தில் நாமும் எடுத்துக்கூற விரும்புகின்றோம்.

பாண்டுங் மகாநாட்டிற் பேசிய தலைவர்களும் ஐக்கிய நாடுகள் சங்கத்தின் பிழையான போக்குகளைக் கண்டித்திருக்கின்றனர். தென்னாபிரிக்காவில் இன்னும் இனவேற்றுமை பாராட்டுவது வருந்தத்தக்கதொரு காரியமென எகிப்துத் தலைமை அமைச்சர் நசார் எடுத்துக் கூறியுள்ளார். இக்கருத்தினையே ஈராக் தலைமைப் பிரதிநிதியும் எடுத்துரைத்துள்ளார். வெள்ளையர்கள் தாம் மற்றவர்களை விட மேலானவர்கள் என்று கருதுகின்றனர். இதனால் இந்தியர்களுக்கும் ஆபிரிக்கர்களுக்கும் எதிராக வேற்றுமை பாராட்டப்படுகிறது. வெள்ளையரல்லாதார் தனியாக ஒதுக்கப்படுகின்றனர் இதனால் இந்தியர்களுக்கும் ஆபிரிக்கர்களுக்கும் எதிராக வேற்றுமை பாராட்டப்படுகிறது. வெள்ளையரல்லாதார் தனியாக ஒதுக்கப்படுகின்றனர்.

## கலைக் களஞ்சியம்

### இரண்டாவது தொகுதி

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் ஆக்கப்பெற்றுவரும் கலைக் களஞ்சியத்தின் இரண்டாவது தொகுதி 14-4-55 ஆகிய புத்தாண்டுத் தினத்தில் வெளியிடப்பெற்றது. சென்னைப் பல்கலைக் கழகக் கட்டடத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்குக் கல்வி, நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்தார்கள். இரண்டாவது தொகுதி கலைப்பணியாற்றிய கல்கி அவர்களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர், சென்னைத் தேசாதிபதி, பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், இராஜாஜி ஆகியோர் 'கலைக் களஞ்சியம்' ஆசிரியர் திரு. பெ. தூரன் அவர்களின் பணியைப் பாராட்டினர்.

## பேராசிரியர் சேதுப்பிள்ளை

### சென்னையிற் பாராட்டுவிழா

'சொல்லின் செல்வர்' பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் 'தமிழ் இன்பம்' என்ற நூலுக்கு இந்திய அரசினர் ஐயாயிரம் ரூபாய் பரிசுவழங்கி கௌரவித்தனர். இச்சிறப்பினைக் குறித்துப் பேராசிரியருக்கு அண்ணாமலைமன்றத்திற் சென்ற 18-4-55இல் நடைபெற்ற விழாவில் அன்னாருக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது. முதலமைச்சர் காமராசர் தலைமை வகித்தார். திரு. அ. மு. பரமசிவானந்தம், செட்டி நாட்டரசர் சேர் முத்தையாச்செட்டியார், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் உட்பட அமைச்சர்களும் பிரமுகர்களும் பேராசிரியரைப் பாராட்டிப்பேசினர்.

## புதிய ஜே. பி.

### வழக்கறிஞர் காரளசிங்கம் நியமனம்

யாழ்ப்பாணப் பகுதிக்குப் புதிய சமாதான நீதிவானாக (ஜே. பி.) வண்ணார்பண்ணை பிரபல வழக்கறிஞர் திரு. எம். ஆர். காராளசிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

## இசை விழா

யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபாவின் ஆதரவிற் சென்ற 16, 17, 18, 19–4–55 ஆகிய திகதிகளில் நடைபெற்ற இசைவிழா நிகழ்ச்சிகள் அடுத்த இதழில் வெளியிடப்பெறும்.

---

இது மனிதனின் கௌரவத்துக்கு முரணான ஒரு பிற்போக்குக் கொள்கையாகும். ஐ. நா. சாசனத்தின் அடிப்படைக் கொள்கைக்கும் இது முரணானதாகும் என அவர் ஒளிவு மறைவின்றிக் கூறியிருக்கின்றார். எனவே பாண்டுங் மகாநாடு உலக சமாதானத்துக்கு அடிகோலுவதுடன் இனவேற்றுமைக்கும் முற்றுப்புள்ளி வைத்து மேனாட்டினரின் திமிரையும் போக்குமென நம்புகின்றோம்.

# பாதை ஓரத்தில்

## பாட்டைசாரி

திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் மகாநாடு முதலமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவல அவர்களின் கண்களைத் திறந்திருக்குமென இலங்கை மக்கள் நம்புகின்றனர். அத்துடன் சிங்களத் தலைவர்கள் சிலரின் பொறுப்பற்ற பேச்சுகள் சிறுபான்மையினரின் உள்ளங்களை எவ்வளவு தூரம் புண்படுத்தி வருகின்றன வென்பதையும் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரான திரு. கு. வன்னியசிங்கம் அவர்களின் தலைமைப் பேருரையிலிருந்து அறிய முடிகின்றது. இப்படி எழுதும்போது கூட்டாட்சிதான் விமோசனமளிக்கத்தக்கதென்று கூறுவதாகக் கருதவேண்டியதில்லை. சிங்களத் தலைவர்கள் வகுப்பு வாதத்தை வளர்த்து வருவதால் ஏற்பட்டுவரும் விபரீதங்களையே இங்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

"ஒற்றையாட்சி முறையின்கீழ் ஆட்சிப்பீடத்திலமரும் சிங்களத்தலைவர் தயவில் என்றென்றைக்கும் ஓர் இனம் வாழமுடியாது. யார் ஆட்சிப்பீடத்திலமர்ந்தாலும் சில அடிப்படையான சிக்கல்களில் நமக்கு நீதி கிடைக்காது. உதாரணமாக நமது மத்தியிற் சிங்களக் குடியேற்றம் நடப்பதை எந்த அரசியற் கட்சியிலுள்ள சிங்களத் தலைவருங் கண்டித்தது கிடையாது. அவர்கள் கண்டிப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கவும் முடியாது. ஆகவே, தமிழ்ப் பிரதேசங்களில் மாகாண சுயாட்சி ஏற்பட வேண்டும் அல்லது நாம் முற்றாகப் பிரிந்து போகவேண்டும். எங்கள் குறைந்த பட்சக் கோரிக்கையானது, சமஷ்டியரசியல் அமைத்து மாகாண சுயாட்சி பெறவேண்டும் என்பதேயாகும்".

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் திருகோணமலையில் முழக்கியிருக்கின்றாராயின் இவ்விதகிளர்ச்சிக்கு வித்திட்டவர் சோல்பெரிப்பிரபுவும் சிங்களத் தலைவர்களுமேயாவார்கள். இவர்கள் எதிர்காலக் காட்சியின்றி இலங்கை மக்கள்மீது திணித்துள்ள சோல்பெரி அரசியல் திட்டம் சிறுபான்மையினரின் உரிமைகளுக்குக் கொள்ளி சொருகியிருப்பதுடன் சிங்களத் தலைவர்களையும் தலைகால் தெரியாமல் ஏறுமாறாக நடக்கவும் செய்துள்ளது.

தமிழ் மக்களுக்குத் தங்கள் தாய்மொழியான தமிழுக்கு ஆபத்து ஏற்பட்டுவருகின்றதென்றபயம் இன்று பெருகிவருகின்றது. யாழ்ப்பாணப் பொதுமக்கள் சென்றவருடம் ஒக்டோபர் மாதத்தில் முதலமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவல அவர்களுக்கு ஒருவரவேற்பு அளித்தனர். அப்போது தமிழும், சிங்களமும் சம அந்தஸ்தைப்பெற்றுச் சரிநிகர் சமானமாக விளங்குமென உறுதிமொழி கூறியிருந்தார். முதலமைச்சரின் அந்த உறுதிமொழி இன்று காற்றோடு பறந்துவிட்டதென்றே எண்ணவேண்டியிருக்கின்றது.

இந்த உறுதிமொழியை முதலமைச்சரும் அரசினரும் நிறைவேற்றிவைக்கப் பின்னிற்பதைக்கண்டு பெருந்தன்மை வாய்ந்த சிங்களத் தலைவர்கள் சிலரின் பேச்சுக்களிற் தமிழினம் சந்தேகங்கொண்டிருப்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. சிங்களத் தலைவர்கள் நீதியாக நடந்து சிறுபான்மையினரின் நம்பிக்கையைப் பெறத் தவறுவார்களாயின் நாட்டில் இனவெறியும் 'பிரிந்து போகவேண்டும்' என்ற பீதியும் கரை பீறிக்கொண்டேவரும்.

இதற்கு நாட்டையும் மக்களையும் பலியாக்காது விட வேண்டுமென ஆட்சியாளருக்கு எச்சரிக்கைசெய்தேயாக வேண்டும்.

## தெய்வத் தமிழ்த் தென்றல்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமயத்தின் பேரால் விழாக் கொண்டாடித் தேவார திருவாசகங்கள் பற்றிப் புகழும் நம்மில் எத்தனை பேருக்கு தேவார திருவாசகம் தெரியும் என்று அவர் கேட்டபோது சபையிலிருந்தெழுந்த பலத்த கரகோஷ ஒலி அதனை ஆமோதிப்பதுபோலிருந்தது.

இலங்கையிற் சமயத்துறையில் அதிகம் ஈடுபட்டுழைத்து வரும்அமைச்சர் சேர் கந்தையா வைத்தியநாதன் முற்பகல் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பையேற்றிருந்தார். அவர் தமது இரத்தினச்சுருக்கமானசொற்பொழிவில் சைவ உலகத்துக்குச்சில நல்ல வேண்டுகோள்களையும் விடுத்தார்.

### காஞ்சிப் பேராசிரியர்

சென்ற ஆண்டு யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரியில் நடந்த இலட்சிய ஜெயந்தியைப் பார்த்தவர்களில் எவருமே காஞ்சிப் பேராசிரியர் திரு. க. வச்சிரவேலு முதலியாரை மறந்திருக்க முடியாது. அவரது பொருள் பொதிந்த, சாரம்மிக்க விரிவுரையை மீண்டும் கேட்பதற்கு யாழ்ப்பாணம் பெரும் ஆவல்கொண்டிருந்தது. அந்த ஆவலை திருமுறை விழா நிர்வாகிகள் பூர்த்தி செய்துவிட்டனர். திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் தேவாரம் பற்றிப் பேசிய அப்பெரியார் சமயக்கண்கொண்டுமட்டுமல்ல இலக்கியக் கண்கொண்டும் சம்பந்தர் தேவாரங்களை ஆராய்ந்தார். திருத்தணி ஓதுவார் திரு. வைத்தியநாத தேசிகரால் திருமுறை ஓதப்பட்டுக் காலை நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

அன்று பிற்பகல் நிகழ்ச்சிகள் திருவச்சிரவேலு முதலியார் தலைமையில் நிகழ்ந்தன. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. வி. செல்வநாயகம் 'கலைமகள்' ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன், சென்னைப் பச்சையப்பன், கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தன், ஆகியோர் விரிவுரைகள் ஆற்றினர்.

— அடுத்த இதழில் முடியும்

## ஸ்கந்தா ஸெற்ஸ் காணிவல்

### முற்றவெளியில் அலங்கார அமைப்பு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வளர்ச்சி நிதிக்கென ஏற்படுத்தப்பெற்று யாழ்ப்பாணம் முற்றவெளியில் ஜெகஜோதியாக மிளிர்ந்து கொண்டிருக்கும் ஸ்கந்தா ஸெற்ஸ் காணிவல் கவர்ச்சிகரமான முறையில் அமைக்கப்பெற்றுள்ளது.

களியாட்ட விழாவுக்குரிய உல்லாசப் பொழுதுபோக்குகளும், நடன நாட்டியங்களும், இன்னிசைக் கச்சேரிகளும், உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் அற்புத நிகழ்ச்சிகளும் குறிப்பிடத்தக்கன.

மக்கள் சினத்தின் மகத்தான கலைக்காட்சியும் சிங்காரிகளின் கலாநிகழ்ச்சிகளும் புத்தம் புதிய சோபையை அளிக்கின்றன.

யாழ்ப்பாணக் கலைக் கைத்தொழிற் கண்காட்சி 27-4-55 புதன்கிழமை ஆரம்பமாகின்றது. நாட்டுக் கூத்துகளும் நாடகங்களும் இக் காட்சியில் இடம்பெறுகின்றன. இத்தனை சிறப்புகளும் நிறைந்து விளங்குவதால் ஸ்கந்தா ஸெற்ஸ் காணிவல் மக்கள் அனைவருக்கும் பெருவிருந்தாக அமைந்துள்ளதென்றே கூறவேண்டும்.


## சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் தங்கள் சந்தாப் பணத்தை ஈழகேசரிக்கு அனுப்பி வைக்கும்போது தமது சந்தா இலக்கத்தையும் குறிப்பிடுமாறு வேண்டுகின்றோம்.

புதிய சந்தா நேயர்களுக்கு ஒருவாரத்துக்குள் பற்றுச் சீட்டுக் கிடைக்காத தவறினால் உடனே சந்தா அதிபருக்குத் தெரிவிக்குமாறு வேண்டுகின்றோம்.

மலாயா அன்பர்களும் இதனைக் கவனிப்பார்களாக.



## வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

சுன்னாகம்

★

எமது வெளியீடுகள் எல்லாம் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

எப்பொழுதும் கிடைக்கும்.

விலைப்பட்டியல் இனமாக அனுப்பப்படும்.

இன்றே எழுதுங்கள்

விற்பனவு உரிமையாளர்:

திருலக்ஷுமி புத்தகசாலை, சுன்னாகம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# பட்டதும் படாததும்

பதி

இன்று தமிழிலக்கியம் இருக்கும் நிலையிலே துணிச்சலான விமர்சனங்கள் வெளிவரவேண்டியதின் அத்தியாவசியத்தைப் பற்றி முன்னொருமுறை குறிப்பிட்டிருந்தேன். மூன்று வாரங்களுக்கு முன் இக்காலத் தமிழ்க் கவிதைகளைப் பற்றிய நல்லதொரு விமர்சனத்தைப் படிக்க நேர்ந்தது.

டில்லியிலிருந்து வெளிவரும் சிந்தனை என்ற ஆங்கிலவார இதழிற் க. நா. சுப்பிரமணியம் ஒரு விமர்சனக் கட்டுரை எழுதியிருந்தார், தமிழறியாத பிறநாட்டு இரசிகர்களுக்கு எமது கவிதைகளை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடனேயே அவர் கட்டுரையை எழுதியிருப்பினும், விருப்புவெறுப்பின்றிச் சில கருத்துக்களைக் கூறியிருக்கிறார்.

"தற்காலத் தமிழ்க் கவிதைகள் என்று நிச்சயமாகக் கூறக்கூடிய உயர்தரக் கவிதைகள் இன்னுந்தான் வெளிவரவில்லை" என்று அவர் எழுதியிருக்கிறார் என்றால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்களோ என்னவோ? மேலெழுந்த வாரியாகப் பார்க்குமிடத்து இக்காலத் தமிழர் சமுதாயத்தைப் படம் பிடிக்கும் கவிஞர்கள் இருப்பதாகவே பலர் எண்ணிக்கொள்வர். எனினும், கலையழகுடன் இக்காலத்தில் வாழும் கலைஞனின் மன ஓட்டங்களையும், அவதிகளையும், பேதவிப்புகளையும், ஒருவராவது மூற்ருகப் பாடவில்லை என்பதை எவரும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.

க. நா. சு. கூறியிருப்பதுபோற் பாரதி இறந்து முப்பது வருடங்களுக்கு மேலாகி விட்டன. இன்னும் பாரதியிலக்கியத்தைத் திறனாய்ந்த ஒரு நூலாவது வெளிவரவில்லை. அதனாலேதான், பாரதியின் கவிதைகளுக்கும், அவரின் 'வழித்தோன்றல்கள்' என்றுமார்பு தட்டிகொண்டு வசனங்களை முறித்துக்கட்டி அடுக்கித்தரும் பலரின் செய்யுள்களுக்கும் தரவேறுபாடு கண்டுகொள்ளப் பலரால் முடிவதில்லை. 'பழுதையென்றும் பாம்பென்றும் பகுத்தறியாப் பான்மையினில், இழுபறியாய்க் கிடக்கின்றது எமது சுவையுணர்வு.'

பாரதியார் மகாகவி, உலகக்கவி, என்று ஆண்டாண்டு தோறும் கூக்குரலிட்டால் மட்டும் போதுமா? பாரதி இலக்கியத்தை முறைப்படி யாராய்ந்தால்தான் பாரதியின் குறைவு நிறைவுகளை அறியலாம்; அவர் உண்டாக்கிய புதுமைகளை உணரலாம்; முடியாதுவிட்ட துறைகளைக் கண்டு கொள்ளலாம்; அப்பொழுதுதான் விட்டகுறையிலிருந்து உண்மையான கவிதா மரபு வளரமுடியும். தமிழிலார்வமுள்ள மேல் நாட்டு ஆராய்ச்சியாளர் ஒருவர் கூறியிருப்பதுபோற் பாரதிக்கு ஏற்பட்டிருக்கும் வீர வணக்கம் அவர் இலக்கியத்தை மூடி மறைத்து விடுகிறது என்பதைப் பலர் உணர்வதில்லை.

ஏறத்தாழ பாரதியாரின் சமகாலத்தவரான ஆங்கிலக் கவிஞர் டி. எஸ். எலியட் என்பவர். அவரின் கவிதைகளைப்பற்றிய ஆராய்ச்சி நூலொன்றைச் சமீபத்திற் படித்துக்கொண்டிருந்தேன். எலியட்டின் கவிதைகளை ஆராய்ந்து எழுதப்பட்ட முப்பத்தெட்டாவது நூல் அது என்று அறியும் பொழுது தமிழன் என்று நினைக்கவே வெட்கமாயிருக்காதா? பாரதி இறந்து முப்பதாண்டுகள் ஆகிவிட்டன. திறனாய்வு நூல்கள் எங்கே என்று கேட்கின்றேன்?

பாரதியின் சிந்தனை வளர்ச்சியைக் கவனிக்கக்கூடிய முறையில் ஆசிரியர் பெ. தூரன் பாரதி தமிழ் என்னும் நூலைத் தொகுத்தார். அதைத் தவிர பாரதியை அறிந்துகொள்ள உருப்படியான நூல் ஏதாவது வெளிவந்திருப்பதாக எனக்குத் தெரியாது. வருடா வருடம் பாரதி தினம் வருமளவும் காத்திருந்து "நினைவுதினக் கட்டுரை" எழுதிவிடும் 'அன்றுடங்காய்ச்சி'களும் 'இலக்கிய மூப்பனார்களும்' மேதாவிகளாகத் திரியும் உலகத்தில் பாரதி வாழ முடியுமா?

# மட்டக்களப்புத் துறை
## அதனால் ஏற்படும் பெறுபேறுகள்

மட்டக்களப்புப் பட்டின சங்க உறுப்பினர் திரு. எம். கணபதிப்பிள்ளை அவர்கள் ஈழகேசரிக்கு எழுதுவதாவது:

இற்றைக்கு ஏறக்குறைய 50 வருடங்களுக்கு முன்னர், மட்டக்களப்புத்துறை இலங்கையின் கிழக்குப்பகுதியில் ஒரு பிரபல துறைமுகமாக அமைந்திருந்தது. நாகபட்டணம், தூத்துக்குடி, பம்பாய் மலபார் முதலிய இந்தியாவின் பல்வேறு இடங்களிலிருந்து கறிச்சரக்குவகைகள், கைத்தொழிற் பொருள்கள், சீமேந்து, ஓடு, அரிசி முதலான பொருள்களும், இலங்கையின் வடபகுதியிலுள்ள உள்நாட்டிலுற்பத்தியாகும் பொருள்களும் கப்பல்கள்மூலமும் பாய்க் கப்பல்கள்மூலமும்மட்டக்களப்புத் துறையில் இறக்குமதியாக்கப்பட்டன, இங்கிருந்து இலங்கையின் பல்வேறு இடங்களுக்கும் இந்தியாவின் பல்வேறு இடங்களுக்கும் தேங்காய், கொப்பரு, வாசனைத்திரவியங்கள், தேயிலை, றப்பர் முதலிய பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. புகையிரதப்பாதைகளும் திருத்தமுற்ற ரோட்டுகளும் ஆக்கப்படுவதற்குமுன்பு, இலங்கையின் மத்திய பகுதியிலுள்ள விளைபொருள்கள் மட்டக்களப்புத்துறைக்குக் கொண்டுவரப்பட்டுப் பின்பு இங்கிருந்து ஏற்றுமதிசெய்யப்பட்டன என்பதைச் சரித்திரவாயிலாக அறியலாம்! இவ்விதம் ஏற்றுமதி இறக்குமதிப் போக்குவரத்தால் மட்டக்களப்பு வாசிகள் பொருள்களை மலிவாகப் பெற்றனர். ஏராளமான பேருக்கு பொருள்கள் ஏற்றிறக்குமதிசெய்வதில் வேலையும் கிடைத்தது. இப்போதும்கூட மட்டக்களப்புத்துறையை அண்டிச் சீவிப்பவர்களிடம் பாய்க்கப்பல்களும், மச்சுவாய் முதலிய நீர்ஊர்திகளும் இருப்பது இதனை நன்கு வலியுறுத்துகின்றது. மட்டக்களப்புப் புகையிரதப் பாதை திறக்கப்பட்டபின்பு இது ஒரு வாணிபத்துறையாகவே அமைந்திருந்தது என்பதை ஈண்டு தெளிவாகக் கூற விரும்புகின்றேன்! இன்றுங்கூட வெளியிடங்களிலிருந்து பொருள்கள் இறக்குமதியாக்கப்படுகின்றன. முக்கியமாகக் கல்லோயாத் திட்டத்துக்குரிய பொருள்கள் இதன் வாயிலாக இறக்குமதிசெய்யப்படுவது, இதன் ஸ்தானத்தைச் சிறப்புறச் செய்கிறது!

இப்போது இலங்கை அரசாங்கம் பொருளாதாரத்தை உயர்த்துவதிலும் மக்களிடையே ஏற்பட்டுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதிலும், பல்வேறு திட்டங்களை வகுத்து நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளதை நாம் அறிவோம். இவ்வித திட்டங்களால் குறிப்பிட்ட ஒரு வகுப்பாரோ அல்லது ஒரு பிரதேசமோ அபிவிருத்தியடைவது ஜனநாயக முறைக்கு எவ்வகையிலும் முரண்பட்டதாகும். இலங்கையின் மற்றப் பாகங்களெல்லாம் தேசியத் திட்டங்களால் ஓரளவு அபிவிருத்தியடைந்துள்ளன. கிழக்குப்பகுதி, பல்வேறு விதத்திலும் சிறந்து விளங்குவதற்குகந்த நிலையை உடையதாகவிருந்தும், இலங்கை அரசாங்கம் இப் பகுதியைப் புறக்கணிப்பது துர் அதிஷ்ட வசமேயாகும். பிரதிநிதித்துவத்தில் குறைந்த தொகையைக்கொண்ட சிறுபான்மைச் சமூகத்தவரின் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து உடனுக்குடன் பரிகாரம் தேடுவதையே உயரிய நோக்கமாகக் கொள்ளவேண்டியது எந்த அரசாங்கத்தின் கடமையுமாகும். இதைத் தற்போதைய அரசாங்கம் நன்கு உணரவேண்டும்!

மட்டக்களப்புத் துறையை வர்த்தகத்துறையாக்கினால் பொருள்களை மலிவாகப் பெறுவதுடன், ஏராளமானபேருக்கு வேலை கிடைப்பதால் மட்டக்களப்புப்பிரிவில் ஏற்பட்டுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒருவாறு சமாளிக்கலாம். முக்கியமாக ஈண்டு ஒரு விஷயத்தைக் கூறவிரும்புகின்றேன். மட்டக்களப்பில் ஏற்படும் மழை வெள்ளத்தால் வருடாவருடம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற் காணிகளுக்கும் விளைவுக்கும் பெருத்த அழிவு ஏற்படுகிறது. இதனால் இப்பகுதியிலுள்ள கமக்காரர்களின் கஷ்ட நிவாரணத்துக்காக வருடா வருடம் அரசாங்கத்திடம் உதவி கோரப்பட்டுவருகிறது. மட்டக்களப்புப்பிரிவு நெல் உற்பத்தியில் உயர்ந்த ஸ்தானத்தை வகிப்பதை எவருமறிவர்! உயிர்நாடியாக அமைந்துள்ள நெல் உற்பத்திக்கு வருடாவருடம் ஏற்படும் அழிவை நீக்குவதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. மட்டக்களப்புத் துறையைத் துறைமுகமாக்கிவிட்டால், பெருத்த மழையால் ஏற்படும் வெள்ளம் நெற்காணிகளை அழிவு செய்யாமல் உடனுக்குடன் கடலுட் செல்லும். மேலும் எதிர்காலத்தில் உணவுப் பொருட்கள் உற்பத்திக்கான திட்டங்களை இப்பகுதியில் அரசாங்கம் மேற்கொண்டால், இப்பகுதியில் மட்டக்களப்புத்துறை ஒரு சிறந்த வாணிபத்துறையாகிவிடும். கல்லோயாத்திட்டத்தை நன்கு நடைமுறைக்குக்கொண்டுவருவதில் இத்துறை பெரிதும் பயனாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இது சம்பந்தமாக மட்டக்களப்புப்பட்டினசபையின் மாதாந்தக்கூட்டத்தில், மட்டக்களப்புத்துறையை ஒரு வர்த்தகத் துறைமுகமாக்கவேண்டுமென்று போக்குவரத்து அமைச்சரைக் கோரும் ஒரு பிரேரணை என்னால் சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது. ஆகவே, இலங்கை அரசாங்கம் இவற்றையெல்லாம் நன்கு பரிசீலனைசெய்து மட்டக்களப்புத் துறையை ஒரு வர்த்தகத்துறையாக மாற்ற விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டியதவசியமாகும். இதற்குக் கிழக்குமாகாணத்திலுள்ள பிரதிநிதிகள் எல்லாரும் சேர்ந்து ஒருமுகமாகநின்று உழைக்கவேண்டும். வர்த்தகத்தை அபிவிருத்திசெய்வதாயும், உற்பத்திப்பெருக்கத்தை ஏற்படுத்த வாய்ப்பாயிருப்பதாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதாயுமிருப்பதால் இதனை ஒரு தேசிய நலனுக்கான திட்டமென்றுகொண்டு, ஏனைய பாராளுமன்ற அங்கத்தவர்களும் ஆதரிப்பார்களென்று நம்புகின்றேன்!

✷ தாய்மொழிக் கல்விக்குத் தனிமதிப்புள்ள காலம் இது. அரசாங்க உத்தியோகத்தர்களும், அரசியல்வாதிகளும், ஆசிரியர்களும், பள்ளிக்கூட மாணவர்களும், பெண்மணிகளும், பிறரும் நல்ல தமிழ் படிப்பதற்கு நாட்டுக்கொரு பத்திரிகை ஈழகேசரியே. 25 வருடங்களாகத் தமிழகத்தின் இருகண்களெனத் திகழ்ந்து வருகின்றது.

## ஈழகேசரி

இலக்கியம் சமயம், கலை, கவிதை, விஞ்ஞானம், தொடர்கதை, சிறு கதை, ஆராய்ச்சி, அரசியற் கட்டுரை, உலக விவகாரம், புத்தக விமர்சனம், செய்தித் திரட்டு, பாலர்பகுதி என்பன முக்கிய அம்சங்கள்.

● ஆரும் வகுப்புத் தொடக்கம் ஜே. எஸ். ஸி. வகுப்புகளுக்குரிய விஞ்ஞானப் பாடங்கள் படங்களுடன் தொடர்ந்து வெளியாகி வருவதோடு எஸ். எஸ். ஸி. மாணவர்களின் சோதனைக்குரிய இலக்கியக் கட்டுரைகளும் சிறப்பாக வெளிவருகின்றன.

ஆண்டுச் சந்தா ரூபாய் 6-00.

அ.பர்,
ஈழகேசரி,
சுன்னுகம், இலங்கை.

ஐயா !

இத்துடன் ரூபாய் 6-00 / (மலாயாவுக்கு) வெள்ளி 6 —ஈழகேசரிக்கு ஒரு வருடச் சாந்தாப் பணமாக அனுப்புகின்றேன். பத்திரிகையைப் பின்வரும் விலாசத்துக்கு அனுப்புக.

..............................
ஒப்பம்

பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................

..............................



## அமுதமொழி

அளவற்ற சாந்தமும், ஆழ்ந்து தோய்ந்த அடக்கமும், அசைக்கொணு அமைதியும், தெய்வத்திடை என்றும் பெருகும் நம்பிக்கையும் இருக்க வேண்டும்.

—ஸ்ரீ அன்னை

ஆசிரியருக்குக் கடிதம்

## சனசமூக நிலையத்தினரும் பொலிசாரும்

ஈழகேசரி 10-4-55 இதழில் "இலங்கையிலுள்ள பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களுடன் சில சனசமூக நிலைய ஊழியர்கள் தொடர்பு கொண்டு சமாசத்தைக் கைப்பற்ற முயல்கின்றனரென்றும் அவர்களைப் பொலிசார் கண்காணிக்க வேண்டுமென்றும் சமாசத்தின் முக்கிய நிர்வாகியொருவர் மேலிடத்துக்கு முறைப்பாடு செய்திருக்கிறாராம்" என்ற செய்தி வெளியாகியுள்ளது.

சமாசத்தின் முக்கிய நிர்வாகிகளுள் ஒருவராவது அப்படி முறைப்பாடு மேலதிகாரிகளுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ செய்யவில்லை என்பதை நானறியத் தருகிறேன்.

ஆனால் இரகசியப் பொலிஸ உத்தியோகஸ்தர் என்னைச் சந்தித்து இரண்டு அரசாங்க உத்தியோகஸதர்களைப் பற்றி விசாரணை நடத்திய பொழுது நான் அவ்விரு உத்தியோகஸ்தர்கள் சம்பந்தமான சாட்சியம் சொன்னதுண்டு.

அன்றியும் காந்தியக் கொள்கை புடையவர்களைப் பற்றி யாராவது முறைப்பாடு சொன்னதாகத் தெரியவில்லை. அவர்கள் பட்டம் பதவியை விரும்பாது பல இயக்கங்களிலும் உண்மைச் சேவை செய்துவருவதையும் எல்லாரும் போற்றுவதையும் நான் கவனித்திருக்கிறேன்.

ச. பி. இராசையா
யாழ்ப்பாணம் ச. ச. ந. சமாசக் காரியதரிசி

யாழ்ப்பாணம்
21-4-55

## சைவ மகாநாடு

'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் அவர்களின் தலைமையிற் சென்ற வியாழக்கிழமை ஆரம்பமான அகில இலங்கைச் சைவ மகாநாட்டு விபரங்கள் அடுத்த இதழில் இடம் பெறும்.

## பத்திரிகையாளர் சம்மேளனம்
### சென்னையில் மகாநாடு

சென்னை, தென்னிந்தியப் பத்திரிகையாளர் சம்மேளனத்தின் 17 ஆவது ஆண்டு மகாநாடு 23, 24-4-55 திகதிகளில் பல்கலைக் கழகக் கட்டடத்துக்கு அருகிலுள்ள இன்ஸ்டிடியூஷன் மண்டபத்தில் நடைபெறும். முதல் நாள் நிகழ்ச்சிகள் மாலை 6.15 க்கு ஆரம்பமாகும். பிரசண்ட விகடன் ஆசிரியர் நாரண துரைக்கண்ணன் அனைவரையும் வரவேற்று விரிவுரையாற்றுவார்கள். டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் மகாநாட்டை ஆரம்பித்துவைப்பார்கள். இந்துப் பத்திரிகையின் துணையாசிரியர் திரு வி. கே. நரசிம்மன் தலைமைதாங்கித் தமது பேருரையை நிகழ்த்துவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது வாசிகசாலை



**நான் கடவுள்:** ஆசிரியர்: தத்துவ ஞானி, ஞானவள்ளல் பரஞ்சோதி மகான்; வெளியீடு: உலக சமாதான ஆலயம், 299, திருவொற்றியூர் ஹைரோடு, புதுவண்ணாரப்பேட்டை, சென்னை-4.

இதன் ஆசிரியர் யோக அப்பியாசங்களில் நம்பிக்கையும் பயிற்சியும் உடையராய் அது சம்பந்தமான தத்துவங்களைத் தெளிவுற அறிந்தவர். வெறும் ஆலய வழிபாடுகளிலும் மந்திர தந்திரங்களிலும் பற்றற்றவர். ஞானம்பெற்ற பேரறிஞர்களின் எண்ண அலைகள் மின் சக்தி போல் ஆற்றல் வாய்ந்தவை என்றும், அவர்தம் வாய்ச் சொற்கள் பயனளிக்கத் தவறா என்றும் அநுபவத்திற் கண்டவர். உலக அமைதிக்காகவே மக்கள் வாழ்வு முக்கியமாக அமையவேண்டும் என்ற பேரவாக்கொண்டவர். அதற்காக 1942இல் உலக சமாதான ஆலயத்தை நிறுவியவர்.

இவை சம்பந்தமாகத்தாம் அநுபவத்திலும் தெளிந்த ஞானத்திலும் கண்ட பேருண்மைகளைத் தெளிவுற இந்நூலில் தந்துள்ளார். "நான் அல்லது நடந்ததெல்லாம் நன்மைக்கே" என்ற பெயருடன் வெளிவந்த மூன்றும் பதிப்புப் பல புதிய கருத்துகளுடன் இந்த நாலாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. "நான்-கடவுள்" என்ற பெயர் வாசகர்க்குப் புரட்சியாக இருக்கும். ஆயின் ஆசிரியர் விளக்கும் அதன் தத்துவத்தைப் புலன் கொள்வார் உண்மையை யுணரமுடியும். மக்கள் சமாதான அடிப்படையில் வாழக் கடைப்பிடிக்க வேண்டிய வழிகளையும், விலக்கவேண்டியவற்றையும் தக்க உவமைகள், வினு விடைகள்மூலமாகத் தெளிவுற விளக்கியுள்ளார். சிறந்த அறிவுரைகளையும் தத்துவங்களையும் உரைநடைச் செய்யுளாக அமைத்துள்ளார்.

கடவுள், பஞ்சபூதத் தோற்றம், உயிர்த் தோற்றம், உணர்வு, குண்டலினியும் அதன்செயலும், அதனுலாம் பயன், ஆருதாரம், அமிர்தம், தவக்கனலும் அதன் சக்தியும், ஞானம்பெறுதல், குண்டலினியையெழுப்பி அமிர்தம் பெற்றுப் பேரானந்தமுறல் முதலியனவாகத் தன்னிலை விளக்கம் பெறக்கூடிய வழிகளையும், விவசாய விருத்தி, அவசியமற்ற தொழில்களை ஒறுத்தல், ஆடை நகை ஒறுப்பு, கருத்தடை அவசியம், கருத் தடை முறைகள், மக்களின் ஒழுங்கான உணவு, தூக்கம் முதலிய அமைதியுறும் வாழ்க்கை வழிகளையும், பலவித நோய்களைத் தடுத்தற்கான தேசிய மருந்து முறைகளையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளார்.

இந்நூலின் முற்பகுதியின் தத்துவங்கள் இன்னும் தெளிவுற விளக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

— நா. க.

**சங்ககால வள்ளல்கள்:** ஆசிரியர்: புலவர் கா. கோவிந்தன், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்; விலை: ரூபா 1-12-0.

சங்ககாலம் என்றுலே, தமிழர் சால்புணர்ந்த ஒவ்வொருவனுடைய உள்ளமும் பூரிக்கும். தமிழன் எல்லாத்துறைகளிலும் சிறப்பாக வாழ்ந்த காலம் அது. இயல் உடையது; இசையுடையது; இனிய கூத்துடையது எங்கள் தமிழ் என்றெல்லாம் இன்று பெருமைப்படுகிறோம் நாம்; இதற்கெல்லாம் ஆதிகாரணமாக இருந்தவர்கள் தமிழ் மூவேந்தர்கள் மட்டுமல்லர்; தமிழ் வள்ளல்களுமாவர்.

"உரைப்பவர் உரைப்பவை
எல்லாம் இரப்பார்க்கு
ஒன்று ஈவார்மேல் நிற்கும்,
புகழ்"

என்று வள்ளுவனுர் காட்டும் உண்மைக்கு இணங்க இல்லையென் றிரப்பார்க்கும், இவரது வாட்டங் கண்டு ஏழைகட்கும் ஈந்து புகழ்பெற்றோர் நம் தமிழக வள்ளல்கள் ஆவர்.

'தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந்
தனரே' (புறம்)
'ஈட்டிய பொருளை ஈந்தும்
எம்மனோர் புகழும்
பண்பால்

பாட்டிடை இசையும்பெற்றுன் என்பன; ஆகவே, அக்கால வள்ளல்களைப்பற்றி இக்காலத் தமிழர் ஒவ்வொருவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டுவது அவசியம்.

பூத்தலை அறுப் புனைகொடி முல்லையின் வாட்டங் கண்டு பொறுத ஈரநெஞ்சுடையான் வள்ளல் பாரியாவன்; இவனையொத்த நன்னெஞ்சுப் பாங்கு கொண்ட ஓரி, காரி, பேகன், அஞ்சி, ஆய், நள்ளி, ஓய்மானுட்டு நல்லியக்கோடன், குமணன் ஆகிய ஒன்பது தலைசிறந்த வள்ளல்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுடைய அருமை பெருமைகளையெல்லாம் இந்நூலின் மூலம் நமக்கு அறிவித்திருக்கின்றார் ஆசிரியர் கோவிந்தன். பாரியைப்பற்றிய எழுத்தே வியத்தில் உயிர்த் துடிப்புக் காணப்படுகின்றது.

அன்று வாழ்ந்த தமிழ் வள்ளல்கள் புலவர்களுக்குப் பொருள் அளித்துப் பேணிப் புரந்தமையால், புலவர்கள் பொருள் தேடியலையும் பணியற்றவராயினர்.

உலகியல்உணர்த்தும் பாக்கள் பலப்பல உண்டாயின என்று உணர்ச்சிவயப்பட்டு எழுதியிருக்கும் ஆசிரியருடைய தமிழைப் படிக்கும்போது நாமும் நம்மை மறந்து ஆசிரியரின் உணர்ச்சியோடு ஒன்றி விடுகின்றோம். அனைவரும் படிக்கவேண்டிய நூல்.

வண்ணை. சி. இராசதுரை.

•

**தெய்வத் தமிழ் மாலைக் கீர்த்தனைகள்:** கிடைக்குமிடம்: ஸ்ரீ. கே. எஸ். சுப்பைய பாகவதர், 84, ராமச்சந்திரபுரம், கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலிஜில்லா. விலை: 2 அணு.

இவ் வெளியீட்டிலுள்ள பாடல்களை மறைமலை அடிகளும், இசைப் பேராசிரியர் திரு. பி. சாம்பமூர்த்தி அவர்களும் பாராட்டியுள்ளார்கள் என நூன்முகத்திற் கூறப்பட்டுள்ளது. பாடல்கள் இசைப்பதற்கேற்ற முறையில் உருவாகியுள்ளன. இராகமுத்திரைகளும் அழகாக அமைந்துள்ளன.

அச்சுப் பிழைகள் அடுத்த பதிப்பிலே திருத்தப்படவேண்டும்.

ஆசிரியர் அவர்களின் இசை அமைப்பைச் சுரதான விளக்கத்துடன் வெளியிடுவது நன்று. என். பி. பி.

•

**இளங் கதிர்:** இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்க வெளியீடு, 1954—55. ஆசிரியர்: இ. சிவகுருநாதன், பல்கலைக் கழகம், பேராதனை.

இளங்கதிர் மலர் 7, தாய்மொழி வாழ்த்து முதல், 'டயறி' பேசிற்று என்பது வரையுள்ள 20 அரிய பொருள்களை அடக்கியுள்ளது. அருணு அச்சகத்திற் பதிக்கப்பெற்று இம் மலர் கண்கவர் வனப்புடன் விளங்குவதோடு கலாநிதி வித்தியானந்தன், பேராசிரியர் கணபதிப்பிள்ளை போன்ற பெரியார் பலர் எழுதிய விஷயங்களைத் தன்னகத்தே கொண்டு தமிழ்மணங் கமழுவதோடு காதல் மணமும் வீசுகின்றது. இளந் தமிழர் யாவரும் விரும்பி வாசிக்க வேண்டியதொரு இனிய சஞ்சிகை இதுவென்று துணிந்து கூறலாம்.

•

**சுரபி:** ஆசிரியர்: வி. இருஷ்ண பிள்ளை. வெளியீடு: கலையரசன் பதிப்பகம், 230, ஆதிருப்பள்ளித்தெரு, கொழும்பு. வருடச்சந்தா ரூபாய் 3-00; விலை சதம் 25.

யாழ்ப்பாணத்தினின்றுமாணவர் மலராக வெளிவந்த திம்பாற் சுரபி, இன்று கொழும்பினின்றுபொதுமலராக—இலக்கிய ஏடாக—வெளிவருகின்றமை மகிழ்ச்சிக்குரிய தொன்றுகும். மாணவர், பள்ளியினின்று வெளிப்போந்து பிறவிடங்களிற் தொழில் புரிவது மரபும் மாண்புமாகும். சுரபியின் புறத் தோற்றம் காண்போர் கருத்தைக் கவரும் பொலிவுடையதாய்ப் புதுமுறையில் அமைந்துள்ளமை போற்றத்தக்கதாகும். உள்ளுறையும் வாசகர் உள்ளத்திற்கு உவகையூட்டுவதாயுள்ளது.

•

**தமிழ் மணி:** ஆசிரியர்: ச. மு. பிள்ளை; வெளியீடு: 501, ருன்டில்ஸ் பிளேஸ், சைடென்ஹாம், டர்பன், நத்தால், தென் ஆபிரிக்கா; விலை ஆறு பென்னி.

"தமிழ்மொழி, இலக்கியம், கலை, சமயம், சமூகம், சாத்திரம், சரித்திரம், பொருளாதாரம் ஆகிய பல்வேறு துறைகளிலும் சிறந்தசேவை செய்யவேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் 'தமிழ் மணி'யை வெளியிட ஆசிக்கிறோம்."

இவ்வாறு தமது ஆவலை வெளியிட்டுத் தமிழுக்குச் சேவை செய்ய முன்வந்த "தமிழ் மணி" பிரசுராலயத்தார் தமிழ்த் தொண்டு வாழ்க!

## பின் வந்த நூல்கள்

**ஆயிரத்து ஓர் இரவுகள்:** (இரண்டாம் பாகம்); மொழி பெயர்த்தவர்: அ. லெ. நடராஜன்; வெளியீடு: அருணு புத்தகநிலயம், திருவல்லிக்கேணி, சென்னை. விலை: மலிவுப் பதிப்பு ரூ. 4-8-0. [illegible]

**தூ..:** மொழிபெயர்த்தவர்: த. நா. குமாரசுவாமி; விலை: ரூ. 2-0-0.

**புலவரும் புரவலரும்:** ஆசிரியர்: வித்துவான் ம. இராமநாதன்; விலை: ரூ. 1-4-0.

**தமிழ்ப் பெண்கவிகள்:** ஆசிரியர்: ஸ்ரீமதி கமலவதனம், விலை: ரூ. 1-4-0.

**கள்ளக் காதலி:** ஆசிரியர்: வி. ச. காண்டேகர்; மொழி பெயர்த்தவர்: கா. ஸ்ரீ. ஸ்ரீ, விலை: ரூ. 1-0-0.

இந் நான்கு நூல்களையும் வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, தபால்ப் பெட்டி 617, மயிலாப்பூர், சென்னை-4.

**காதல் இன்பம்:** கவிஞர் சாமி பழனியப்பன்; வெளியீடு: ஸ்டார் பப்ளிகேஷன்ஸ், நம். 5, புதுச்சந்தை வீதி, காரைக்குடி, இராமநாதபுரம் ஜில்லா,) விலை: ரூ. 1-8-0.

**மார்க்கோ போலோ:** ஆசிரியர்: வி. எஸ். வி. இராகவன்; வெளியீடு: லோடஸ் பப்ளிசர்ஸ், 2, கொண்டி செட்டித்தெரு, சென்னை 1. விலை: அணு. 14.

**சூழ்ச்சி:** ஆசிரியர்: பெ. தூரன்; விலை: ரூ. 1-0-0.

**மனக் குகை—நாடகம்:** ஆசிரியர்: பெ. தூரன்; விலை: ரூ. 1-2-0.

இவ்விரு நூல்களையும் வெளியிட்டோர்: அமுத நிலையம் லிமிடெட், தேனும்பேட்டை, சென்னை-18.

# கலைமன்றத் தமிழ் விழா
# நடுத்தர வகுப்பினர் தவிப்பு

கிழக்குத்தபால் : : ஊரி

மட்டக்களப்பு 21-4-55

மட்டக்களப்புத் தமிழ்க் கலைமன்றத்தினர் ஆண்டுதோறும் நடாத்தும் தமிழ் விழா இம்முறை 23-4-55 சனிக்கிழமை நகர மண்டபத்தில் ஆரம்பமாகின்றது. சென்னை கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் இவ் விழாவிற் பங்குபற்றி விரிவுரையாற்றுகின்ருர். யாழ்ப்பாணத்திலிருந்து பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை அழைக்கப்பட்டுள்ளார். வேறும் பல அறிஞர்கள் விழாவிற் பங்குபற்றி விரிவுரைகள் ஆற்றுவார்கள்.

## பெரும்போக நெல் விளைவு

இம்முறைய முன்மாரி நெல்விளைச்சல் மிகச் சிறந்ததாக இருப்பதனுல் மக்கள் புதுவருடப்பிறப்பை உண்மைக் களிப்போடு கொண்டாடினுர்கள். அண்மையில் வந்த வெள்ளப்பெருக்கு மட்டக்களப்பின் தென்பகுதி வயல்களை ஆழ்த்திச் சேதப்படுத்திய போதிலும் முன்மாரி வயல் நிறைந்த வடபகுதி ஒருவாறு தப்பி நல்ல விளைவினுல் நாட்டை வளம்படுத்துவதாயிற்று. 1 ரூபாய்35 சதம்வரை விற்ற ஒரு கொத்து அரிசி இப்போது 85 சதம் விற்கத்தக்க அளவுக்கு நெல் மலிந்துள்ளமை வியக்கத்தக்கதாகும்.

வழக்கமாக உழவர்களின் செல்வத்தைக் கொள்ளை கொள்ளும் வியாபாரிகள் பலர் ஏமாந்து போகத் தக்கதாக நெல் உற்பத்திச் சங்கங்கள் விளைவின நல்ல விலைக்குத் தாமே நேரில் வாங்கித் தொழிலாளரின் பண நிலையினைப் பாதுகாத்திருக்கின்றன. இதனுற் கேளிக்கை மிகுந்த கிராமந்தோறும் கூத்துகளும் கும்மிகளுமாகப் புதுவருடப்பிறப்பு அழகுற்று நிற்கின்றது.

## நடுத்தரவகுப்பினருக்கு நெற்காணி

பொருள்வள நிலையில் உயர் வில்லாராயினும், பொருள் நிலை குறைந்த கீழ்வகுப்பாருடைய சமநிலையிலும் வாழ முடியாது இடையிற் தவிக்கும் நிலையில் உள்ளவர்கள் நம் நாட்டு நடுத்தரவகுப்பார். இவர்களுக்கு உன்னிச்சைப் பாய்ச்சற் பகுதியில் உள்ள அரசாங்க காணிகளிலிருந்து ஏறக்குறைய 1100 ஏக்கர் அளிக்கப்படும் என்ற செய்தி பெருமகிழ்ச்சி ஊட்டுவதாயிற்று. இம்மாதம் 2 ஆம் திகதி அதற்கென நடைபெறவிருந்தகாணிக்கச்சேரியானது திடீரென்று மாற்றப்பட்டு பல்வேறு திகதிகளைக் குறிப்பிட்டழைக்கும் கடிதங்கள் விண்ணப்பம் இட்டோரை நோக்கிப் பறந்தமை இக் நிலையில் ஆச்சரியமாயிற்று. நடுத்தர வகுப்பாருக்கென்று அழைக்கப்பட்ட விண்ணப்ப இடங்கள் பலவற்றைப் பெரும் பணக்கார வழக்கறிஞர் என்ஜினியர் போன்ற உயர்தர உத்தியோகத்தரும் போடிமாரும் நிரப்பியிருப்பதாகத் தெரிகின்றது. இதனுல் காணிப் பங்கீடு நடுத்தர வகுப்பாரைக் கைகடந்துவிடுமோ என்ற அச்சமும் பொதுமக்களிடைப் பிறந்துள்ளது. அதிகாரிகள் இதில் நடுநிலை தவருது நடத்தல் வேண்டுமென்று எல்லாரும் எதிர்பார்க்கின்ருர்கள்.


## டி. சி. ஆர். குணவர்த்தனு

கிழக்கு மாகாண அதிபதியாகத் தாம் இருந்த காலத்தில் மட்டக்களப்புப் பட்டினத்துக்கண்மையில் ஒரு விமான நிலயம் அமைத்தற்கென்று அளவை வேலைகள் நடந்ததாகவும், கல்லோயாத் திட்டத்துக்குமாகச் சேர்த்துப் பெரிய அளவில் ஒரு நிலயம் அமைக்க அப்போது சாத்தியமில்லை என்று வேலைகள் நிறுத்தப்பட்டனவெனவும், கல்லோயாவுக்கான தனிநிலயம் அம்பாரையில் இப்போது அமைக்கப் பட்டுவிட்டதால் பொதுமக்களுக்காக நகருகில் ஒரு நிலயத்தை அமைக்க வேண்டுமென்று அரசாங்கத்தை நினைவூட்டினுல் அது இப்போது கைகூடலாகும் என்றும் அண்மையில் நடைபெற்ற சனசமூகநிலைய விழாவிற் பங்குபற்றிய திரு. டி. சி. ஆர். குணவர்த்தனு அவர்கள் பேசினுர்கள். இம்மாகாணத்தில் பலமுறை கடமை புரிந்து சென்றதனுல் மட்டக்களப்பு நாட்டில் நிறைந்த பற்றுள்ள தன்போன்ருருக்கு இங்கு வருதற்குள்ள பயண வசதிக் குறைவுகளைப் பற்றிக் குறிப்பிடும்போது இவ்வாறு கூறினுர்கள். உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சின் செயலாளரான இவர் இந்நகரின் குடிநீர்ப் பிரச்சினை அண்மையிற் தீர்க்கப்படப்போவதையிட்டு மிகுந்த மகிழ்வோடு தெரிவித்தனர். கல்முனையிற் புதிதாகக் கட்டப்பட்ட பட்டின சபை மண்டபத்தையும் இப்பெரியார் திறந்துவைத்து நல்லதொரு சொற்பொழிவாற்றினர்.

## யாழ்ப்பாணக் கலை கைப்பணி அபிவிருத்திக் கழகம்

இம்மாதம் 20-4-55 ஆம் திகதி மாலை 6 மணிக்கு ஸ்கந்தா லேற்ஸ் காணிவல் மைதானத்தில் ஆரம்பிக்கவிருந்த பொருட்காட்சி மழை காரணமாக இம்மாதம் 27-4-55 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்குப் பின்போடப்பட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# கேட்டதும் நடந்ததும்

## இரண்டாம் பாகம் அத்தியாயம் 11 பூ! இவ்வளவு தானு?

—தேவன் — யாழ்ப்பாணம்—

### முன் கதைச் சுருக்கம்

கோபாலபிள்ளை கல்லாறிலே பிறந்து, வளர்ந்தவர். ஆனல், பணமும் பதவியும் அவர் சம்பாதித்தது மலாயாவிலே யுத்தம் மலாயாவுக்கும் பரவிய சமயத்தில் தாய்நாடு திரும்பினர். வழியில், மனைவியைப் பறிகொடுத்தார். ஊருக்கு வந்த பிறகும் அவருக்கு அதிர்ஷ்டம் அடித்தது. பணம் குவிந்தது. இரண்டாவது தடவையாக இன்னெரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். நெடுநாளைக்கு அதிர்ஷ்ட தேவதை அவர் வீட்டில் குடியிருக்கவில்லை. நிலைமை மாறுகிறது. அவருடைய் மூத்த மகன் குடும்பத்தை விட்டுப் பிரிந்து தன்வழிசென்ருன். இரண்டாவததான் சகுந்தலை. அவளுக்குப் பருவ வயது. ஒரு பஞ்சு ஆலையில் வேலை பார்த்து வருகிருன். மூன்ருவது ராஜா. அவனுடைய நடத்தைப் பிசகினல் வீட்டைவிட்டு விரட்டப்படுகிருன். அந்த ஊர்க் கல்லூரிக்கு ஆசிரியராக நியமனம்பெற்று புதிதாக வந்த ஒருவரிடம் தஞ்சம் புகுந்தான். அவர் அவனை ஆதரித்தார். அவன் மூலமாக அவனுடைய சகோதரி சகுந்தலை அவருக்கு அறிமுகமாகிருள். விதி விளையாடுகிறது. மாரன் தன் வேலையைச் செவ்வனே செய்துவிடுகிருன். காதல் மூளைக்கிறது. மலர்கிறது. ராஜாவுக்கு வெளியூரில் நல்ல உத்தியோகம் தேடிக் கொடுக்கிருர் அந்த ஆசிரியர். அவன் அவரை விட்டுப் பிரிய மனமில்லாமல் தவிக்கிருன். இதற்கிடையே ஊரில் அந்த ஆசிரியரையும் சகுந்தலையையும் பற்றி வதந்தி கிளம்பி விடுகிறது. ஆகவே ஊர் வம்பைத் தடுக்க அந்த ஆசிரியர் சகுந்தலையோடு தன்பிணைப்பை உறுதிப்படுத்திக்கொள்ள நிச்சயிக்கிருர். அவளுடைய அன்பை சந்தேகிக்கும்படியாக அவளுடைய நடத்தை அமைகிறது. மேலே என்ன செய்வதென்றறியாமல் திண்டாடுகிருர். பாவம்! காதலுக்கும் கடமைக்கும் கடுமையானபோட்டி அவர் மனதிலே, மனச்சாட்சிக்கும் வதந்திக்கும் போராட்டம் அவர் உள்ளத்திலே. உள் உணர்ச்சிகளுக்கும் வெளிக்கோட்பாடுகளுக்கும் முரண்பாடு உண்டாவது எந்த மனிதனுடைய வாழ்க்கையிலும் நடைபெறுவததானே! இந்த ரசமான கட்டத்திலிருந்து கதை இவ்வாரம் தொடர்கிறது.... இனிப் படியுங்கள்.

அவள் வழக்கத்துக்கு முன்பாகவே ஆலையிலிருந்து புறப்பட்டிருக்கவேண்டும். பஸ் நிலையத்திலிருந்து அப்பொழுது தான் புறப்பட்டுக்கொண்டிருந்த பஸ் வண்டியையும் தவற விட்டுவிட்டு எனக்காகக் காத்துக்கொண்டு நின்ருள். மாலையிற் சந்திக்கும்படி நான் சொல்லியிருந்ததை அவள் மறக்கவில்லை. என்ன விசேஷம் என்று அறிய அவளுக்கு ஆவல் உண்டாயிருக்கவேண்டும். நான் சொல்ல நினைத்தது என்ன என்று அவளுக்குத் தெரியாமலிருக்காது. இவ்வளவு நாளும் ஏன் இந்தவிதமான பிரஸ்தாபமே எடுக்கவில்லை என்று அவள் நினைத்திருக்கலாம். அவளை நான் அணுகும்போது அவளும் நேரப்போவது என்ன என்று தெரிந்தவள்போலவே நின்றுகொண்டிருந்தாள்.

"இன்று பஸ் வேண்டாம். நடந்தே போகலாம்" என்று நான் கூறியதை அவளும் வரவேற்ருள். என் பேச்சின் குறிப்பை அவளும் தெரிந்துகொண்டாள். மெதுவாக நடக்க ஆரம்பித்தோம். அதை எப்படிச் சொல்வது என்று தயார் பண்ண ஆரம்பித்தேன். கொலைக் குற்றவாளிசார்பில் ஏற்படுகிற நியாயவாதி கூடத் தான் சொல்லப்போவதை வரிசைப்படுத்தி அழகாய்ச் சொல்வதில் என்னைப் போல அக்கறை செலுத்த மாட்டார். என் மூளையைக் குடைந்தேன். வார்த்தைகளையோ, கருத்துகளையோ ஒழுங்குபடுத்த முடியவில்லை. மௌனமாய்ப் போய்க்கொண்டிருப்பது அவளுக்குக் கஷ்டமாயிருந்தது.

"ஏதோ சொல்லவேண்டுமென்றீர்கள், அப்புறம் பேசாமலே வருகிறீர்களே" என்ருள். தான் எதிர்பார்த்தது என் வாயிலிருந்து வராதா என்று அவள் ஏங்குவதாக அந்த வார்த்தைகள் அர்த்தமாயின. தன்னுடைய படபடப்பை மறைக்க அவள் பாடுபட்டாள். என் மனதிலிருந்து, மானஸிகத் தந்திமூலம் அவளுக்குத் தெரிந்துபோய்விட்டது என்றுதான் நினைத்தேன்.

"உனக்குத் தெரியாதா?.........அதிகம் பேசவேண்டியிருப்பதால் தானே நடந்து போகலாம் என்றேன். போதிய நேரமிருக்கிறது நான் சொல்ல விரும்புவது என்னவென்று உனக்கு உண்மையாகவே தெரியாதா?" என்று கேட்கும்போது பிறர் என்னைப் பார்த்திருக்கமாட்டார்கள் என்றே நம்புகிறேன். என் முகத்தில் அசடுவழிந்திருக்கும். விளக்கெண்ணெய் குடித்தவர்கள் முகத்தைப் பார்த்திருக்கிறேன். அவர்களுடையதைப்போலத்தானிருந்திருக்கும்.

"இல்லை. எனக்கு ஒன்றுமே தெரியாது. நீங்களே சொல்லுங்கள்" என்று அவள் பதிலளிக்கையில் அவளுடைய குரலும் பார்வையுமே அவளைக் காட்டிக் கொடுத்தன. பொய் பேசுகிருள் என்பது தெளிவாகத் தெரிந்தது—வழக்கமான கலகலப்பு இந்தச் சமயத்தில் எப்படி இல்லாமல் போயிற்று?

எங்கோ தூரத்தில் மேளச் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. மோகனராகத்தை நாதஸ்வரக்காரன் ஆலாபனை பண்ணி நிறுத்தினுன். எங்கேயோ கல்யாண வீடு போலிருக்கிறது. அப்பொழுது ஒரு சிறு பிள்ளையார் கோவிலைத் தாண்டிக்கொண்டிருந்தோம். உள்ளே மணிச்சத்தம் கேட்டது. பூஜை நடந்துகொண்டிருந்தது. அடடா! மாலையாகிவிட்டபிறகு மத்தியானப் பூஜை நடக்கிறது. அந்தக் கோவில் பூஜை செய்யும் பிராமணருக்கு அன்று பிள்ளையாருக்கு மத்தியான அமுது படைப்பதிலும் பார்க்க முக்கியமான அலுவல் எதுவோ இருந்து இதுவரை தாமதிக்கச் செய்துவிட்டது. அந்த மணியோசை, மேளச் சத்தம் இரண்டும் சுபசகுனம் என்று எனக்குப் பட்டது. கோவிற் பூஜை நடக்கிற தென்ருல் கையெடுத்துக் கும்பிடாமற் போக முடிவதில்லை எனக்கு. ஆனல், சகுந்தலையோ அதைக் கவனிக்காமல் விறுக்கென்று நடந்துசென்ருள். நான் கனவு காணும் லட்சியப் பெண்ணு இப்படி நடந்து போகிருள்?

நான் வரவழைத்துக்கொண்ட தைரியம் என்னிடமிருந்து விடைபெற்றுவிடும்போலிருந்தது. இன்னும் கொஞ்சத் தூரம் சென்றதும் ஒரு சந்தி திரும்பவேண்டியிருந்தது. நேரே போவது பஸ் செல்லும் பாதை. திரும்பினுல் ஒரு குறுக்குப்பாதை. அந்தக் குறுக்குப் பாதையில் தான் பல வருஷங்களுக்கு முன்னுல் அவளுடைய பாட்டி வசித்தாள். அதே சுற்று வட்டாரத்தில் தான் இப்போதுங்கூட ரங்கசாமியும் கண்மணியும் வசித்துவருகிருர்கள். சரஸ்வதியின் பெயரில் மங்களம் எழுதிவைத்த நிலமும் அங்கிருந்து வெகு தூரத்திலில்லை. மலாயாவிலிருந்து திரும்பியபின் அந்த நிலத்தைக் கோபாலபிள்ளை விற்றுவிட்டார். என் 'தம்பி' மூலம் எனக்குத்தான் முழுவிபரமுந்தெரியுமே. சகுந்தலை இடையிடையே என் முகத்தைத் திரும்பிப் பார்த்தாள். ஏதோ கேட்க விரும்புகிறவள்போல அவள் உதடுகள் குவிவதும் அப்புறம் மனதை மாற்றிக்கொண்டு ஒன்றுமே பேசாமல் போவதுமாக இருந்தாள். மனம் மிக வேகமாக வேலை செய்துகொண்டிருந்ததனுற் போலும், அவள் கால்நடையும் வேகமாயிற்று. இப்படியே போனுல் என்னிடமிருந்து எட்டிப் போய்விடுவாள்.

"சகுந்தலை இந்த இடத்தை உனக்கு நன்ருகத் தெரியுமா?" என்று கேட்டேன்.

"தெரியாமலிருக்கமுடியுமா? பஸ் கிடைக்காத நாட்களில் நான் இவ்வழியே எத்தனையோதடவை வீட்டுக்குப் போயிருக்கிறேன்" என்ருள்.

"அப்படிச் சொல்லவில்லை—இங்கேதான் முப்பத்தைந்து நாற்பது ஆண்டுகளுக்குமுன் உன் பாட்டி இருந்தாள். அந்தக்காலத்தில், உன் தகப்பனுர் கல்யாணம்பண்ணிக்கொள்வதற்கு முன்னுல், இந்த இடங்களில் தான் ஓடிவிளையாடித் திரிந்தார்.........அதைத்தான் தெரியுமா என்றுகேட்டேன்."

அவள் முகத்தில் அதிசயக்குறி படர்ந்தது. அவள் போட்டிருந்த குங்குமப்பொட்டு அவள் முகம் முழுவதையும் மூடி மறைத்ததுபோல—எப்படி இதெல்லாம் எனக்குத் தெரிந்தது என்றுதான் அவள் ஆச்சரியப்பட்டிருக்கவேண்டும். அவள் முகத்தைச் சுழித்தமாதிரியிலேயே அந்தப் பேச்சு அவளுக்குப் பிடிக்கவில்லை என்பது தெரிந்துபோய்விட்டது.

"எதற்காக ஆச்சரியப்படுகிருய்? இதேவழியால் தான் உன் தாய் தந்தையரின் கல்யாண ஊர்வலம் போயிருக்கும். அப்போது இந்த வீதியில் மின்சார விளக்குகள் இருந்திருக்கா. ஓரத்தில் அழுக்கு நீர் ஓடும் இந்த வாய்க்காலும் இருந்திருக்காது... ...உன் தகப்பனுர் வழிப் பாட்டியையாவது தெரிந்துகொள்ள நீ முயற்சித்ததில்லையா? இங்கே சமீபத்தில்தான் அவளும் குடியிருந்திருக்கவேண்டும். உன் அம்மா சிறியவளாயிருந்தபோது பாவாடை சட்டையுடன் இந்த வீதி வளியே நடந்திருக்கலாமல்லவா? விசாலம்—உன் தந்தையின் தாய்தான் நீ அறியாத காலத்திலேயே காலமாகிவிட்டாள். ஆனல் உன்னை மடியில் வளர்த்திச் சீராட்ட நினைத்த மங்களம் குடியிருந்ததும் இங்கே எங்கேயோதான் என்பது உனக்குத் தெரியாதா? அவளைத் தெரிந்தவர்கள் யாராவது இப்போது உன்னைக் கண்டால் சரஸ்வதியைப் போலவே இருக்கிருளே அவளுடைய பெண்ணும் என்று பேச்சுக்காகவாவது சொல்லிக்கொள்ளுவார்கள். அதே மூக்கு, அதே மூழி, அதே வாய்த் துடுக்கு.........இப்படியெல்லாம் சொல்வது ஒரு வழக்கம். உண்மையில் பெற்றவளும் மகளும் உருவத்தில் வேருனுலும்" என்று நான் விடாமல் கேட்டேன். அடைத்துப்போயிருந்த வாய் திறந்துகொண்டது. எங்கேயோ ஆரம்பித்துவிட்டேன். இனி எப்படியாவது சுற்றிவளைத்து நான் ஆரம்பித்த விஷயத்துக்கு வந்து சேர்ந்துவிடுவேன். ஆமாம்; இன்றைக்கு ஒரு முடிவு, நல்லதோ கெட்டதோ, செய்தாகவேண்டும். அணு அணுவாகச் செத்துக்கொண்டிருக்க என்னுல் முடியாது.

"உங்கள் கற்பனை நன்ருய் இருக்கிறது. ஆனல், எனக்கு என் முன்னேரைப்பற்றி அதிகம் தெரியாது. தெரிந்துகொள்ள விரும்பவுமில்லை. நீங்கள் எப்படி இதெல்லாவற்றையும் அறிந்தீர்கள்? என் 'தம்பி' உங்களிடம் சொல்லியிருப்பான். அவன் ஒரு பைத்தியம் அவன் உளற ஆரம்பித்தால் அதற்கு எல்லையில்லை. உங்களிடமும்தான் வழக்கமான வேலையைச் செய்திருக்கிருன். ஆனல் அவனுக்கு முழு விஷயமும் தெரியாது, [illegible]. அப்பாவுக்கும்கூடத் தெரியும் [illegible]. ஆகவே, அதிகம் கைச்

(தொடர்ச்சி 12ஆம் பக்கம் பார்க்க)

## கல்கியின் கலைப் பணி

### ஆசிரியர் ஸ்ரீநிவாசன் பாராட்டு

சென்னை மேற்கு மாம்பலத்தில் செயலாற்றிவரும் மாம்பலம் தமிழ் மன்றத்தின் ஆதரவிற் சென்ற 10-4-55 ஞாயிறு மாலை கல்கி ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழா, சுதேசமித்திரன் ஆசிரியர் திரு. வி. ஆர். ஸ்ரீநிவாஸன் அவர்கள் தலைமையிற் சிறப்பாக நடைபெற்றது. திரு. ஏ. இராஜகோபால சர்மா அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் மன்றத்தின் அடிப்படை நோக்கத்தையும் அது புரிந்துவரும்சேவைகளையும் விவரமாய் எடுத்துரைத்தார். ஆசிரியர் திரு. வி. ஆர். ஸ்ரீநிவாஸன் தமது உரையில் மன்றத்தின் முயற்சிகளையும், சேவைகளையும் பாராட்டியதுடன் கல்கி ஆசிரியர் அவர்களின் தேசப்பணியையும், தமிழ்ப் பணியையும், கலைப்பணியையும் அழகாக விவரித்துக் கூறினர். தவிர தாம் ஆரம்பித்துள்ள கல்கி நினைவு நிதிக்கு எல்லோரும் தாராளமாகப் பொருளுதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

படத்தைத் திறந்துவைத்த சென்னைச் சட்டசபைச் சபாநாயகர் திரு. ஜே. சிவஷண்முகம்பிள்ளை பேசுகையிற் கல்கியின் மகத்தான சேவைகளைப் பாராட்டியதுடன் அன்னுரின் அகால மரணத்தினுல் இன்று தமிழ் நாடு பெரும் நஷ்டத்தை அடைந்துவிட்டதெனவுங் குறிப்பிட்டார்.

கல்கியின் உருவப் படத்தை மன்றத்துக்கு அன்புடன் வழங்கிய கல்கி அதிபர் திரு. டி. சதாசிவம் அவர்களுக்கும் ஏனையோருக்கும் ஸ்ரீ. கே. எஸ். வேங்கடேச ஐயர் நன்றிகூறினர். —கடிதம்

## பாராட்டுக் கூட்டம்

உடுவில் வ. மு. இரத்தினேஸ்வர ஐயரவர்களின் 74ஆம் ஆண்டுத் தொடக்கமான 1-5-55 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நாவலர் நினைவு மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெறும்.

முடிக்குரிய நியாயவாதி திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் பாராட்டுரையும், புலவருக்குப் பொன்னுடைபோர்த்தலும்நடைபெறும்.

## இலங்கைச் சமாதான வாலிபர் காங்கிரஸ்

கொழும்பிற் சென்ற 2-4-55இல் பத்திராதிபர்கள், ஆசிரியர்கள், இளம் எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், மாணவர் முதலியோர் கூடி 'இலங்கைச் சமாதான வாலிபர் காங்கிரஸ்' தாபனம் ஒன்றை அமைத்தனர். இக் கூட்டத்திற்குத் திரு. கோசுதா அவர்கள் தலைமை வகித்தார்கள். கூட்டத்தின் நோக்கம் பற்றிப் பலர் பேசியதை யடுத்து நிருவாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. —கடிதம்

தீவுப்பகுதிகளில்
ஈழகேசரி
கிடைக்குமிடம்:
கைற்ஸ் டிஸ்ரிபியூரேர்ஸ்
ஊர்காவற்றுறை

புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்.
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம். இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகநானூறு

### 55. பாலை

காய்ந்துசெலற் கனலி
கல்பகத் தெறுதலின்
நீந்துகுரு குருஞ்
மென்றாழ் நீளிடை
உளிமுக வெம்பர
லடிவருத் துருலின்
விளிமுறை யறியா
வேய்கரி கானம்
வயக்களிற் றன்ன
காளையொ டென்மகள்
கழிந்ததற் கழிந்தன்றே
விலனே யொழிந்தியான்
ஊதுலைக் குருகி
னுள்ளுயிர்த் தசைஇ
வேவது போலும்
வெய்ய நெஞ்சமொடு
கண்படை பெறேஎன்
கனவவொண் படைக்
கரிகால் வளவனொடு
வெண்ணிப்பறந்தலைப்
பொருதுபுண் ணாணிய
சேர லாதன்
அழிகள மருங்கின்
வாள்வடக்கிருந்தென
இன்ன வின்னுரை
கேட்ட சான்றோர்
அரும்பெற லுலகத்
தவனொடு செலீஇயர்
பெரும்பிறி தாகி
யாங்குப் பிரிந்திவட்
காதல் வேண்டியெற்
றுறந்து
போதல்செல்லாவென்
னுயிரொடு புலந்தே

என்பது, புணர்ந்து உடன்போன தலைமகட்கு இரங்கிய தாய் தெருட்டும் அயலிலாட்டியர்க்கு உரைத்தது. தெருட்டும் — (தன்னைத்) தெளிவிக்கும். அயலில் ஆட்டியர் — அயலிலுள்ள மகளிர். — மாமூலனார்

**வித்துவசிரோமணி**
**சி. கணேசையர்**

இ — ள்: காய்ந்து செலல் கனலி கல்பகத் தெறுதலின் — வெப்பமுற்றுச் செல்லுதலையுடைய ஞாயிறு மலைகளும் பிளக்கும்படி சுடுதலினால், நீந்து குருகு உருகும் என்றாழ் நீள்இடை — கடந்து செல்லும் பறவைகள் வருந்துதற்குக் காரணமான வெய்யில் மிக்க நீண்ட அக் காட்டுவழியிடத்தே, உளிமுக வெம்பரல் அடி வருத்துருலின் — உளிபோலும் முகத்தையுடைய கொடிய பரற்கற்கள் அடிகளை (கால்களை) வருத்துதலின், விளிமுறை அறியா வேய் கரி கானம் — இறக்குமுறைமை (இயல்பு), இன்ன இடத்தில் என்று அறியப்படாத (வெப்ப மிகுதியால்) மூங்கில்கள் கரிந்துள்ள காட்டை, வயக்களிறு அன்ன காளையொடு என்மகள் கழிந்ததற்கு அழிந்தன்று இலன் — வலிய களிற்றியானையை ஒத்த காளைப் பருவத்தை யுடையானோடு என் மகள் கடந்து சென்றதற்கு யான் வருந்தினேன் அல்லேன் (பின் எதற்கு வருந்தினேனெனின்), யான் ஒழிந்து ஊது உலைக் குருகின் உள் உயிர்த்து அசைஇ வேவது போலும் வெய்ய நெஞ்சமொடு கண்படை பெறேஎன் கனவ — யான் அவளைப் பிரிந்து உலைக் கண் (நெருப்பை) ஊதும் துருத்திபோல அகத்தே நெட்டுயிர்ப்பு விட்டு (பெருமூச்சு விட்டு) உளமெலிந்து (தீயில்) வேவது போன்ற வெப்பமிக்க மனத்தோடு துயில் பெறேனாய் (நித்திரையிலேனாய்) கனாக் கண்டு வாய் வெருவிப் புலம்பும்படி, ஒண்படைக் கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலை பொருது புண் நாணிய சேரலாதன் — ஒள்ளிய படையையுடைய கரிகாற் சோழனோடு வெண்ணியென்ற இடத்திலுள்ள போர்க்களத்தே பொருது புறப்புண்பட்டமைக்கு நாணமுற்ற பெருஞ் சேரலாதனென்பான், அழிகள மருங்கின் வாள் வடக்கு இருந்தென — பொருது தோற்ற போர்க்களத்தின் புறத்தே வாளொடு வடக்கிருந்தானாக, இன்ன இன்உரை கேட்ட சான்றோர் — (அச் செய்தியாகிய) துன்பமும் இன்பமுந் தரும் வார்த்தையைக் கேட்ட அறிவா நிறைந்த பெரியோர்கள், பெறல் அரும் உலகத்து அவனொடு செலீஇயர் பெரும் பிறிது ஆகியாங்கு — பெறுதற்கரிய துறக்கத்திற்கு (சுவர்க்க வுலகத்திற்கு) அவனோடு போகுமாறு தம் உயிரைத் தாமே விட்டாற்போல (இறந்தாற்போல), இவண் காதல் வேண்டி — இவ்வுலக வாழ்வின் ஆசையை விரும்பி, என் துறந்து பிரிந்து போதல் செல்லா என் உயிரொடு புலந்து — என் உடம்பை விட்டுப் பிரிந்து போகாதிருக்கின்ற என் உயிரையே வெறுத்தேன் எ — று.

புலந்து — தன்மைவினைமுற்று. கனவும்படி போதல் செல்லா உயிரென முடிக்க. புலந்து என்பதை எச்சமாக்கி, அழிந்தன்றேவிலன் என்பதனோடு முடிப்பாருமுளர். அது சிறப்பின்று. புலந்து அழிகின்றேன் என ஒரு சொல் வருவித்து முடித்தல் சிறப்பாகும்.

(முடிபு) யான் கானம் காளையொடு என்மகள் கழிந்ததற்கு அழிந்தன்றே இலன். நெஞ்சமொடு கனவ போதல் செல்லா என் உயிரொடு புலந்து (புலந்தேன்) என முடிக்க.

(விரிவுரை) வெண்ணி — ஓரூர். புறம் — 66 ஆம் செய்யுளுரை நோக்குக. சேரலாதன் வடக்கிருந்தெனக் கேட்ட சான்றோர் அவனொடு செலீஇயர் பெரும்பிறிதாகி யாங்கு துறந்து போதல் செல்லா உயிர் என இயைக்க. உறல் — உறுதல். 'விளிமுறை அறியா — இன்ன இடத்தில் இன்ன கேடு வருமென்றறியாத' என்று பொருள்கொள்வர் குறிப்புரைகாரர். அழிந்தன்றே என்பதில் ஓகாரம் — இன்னா உரை — இறக்கின்றான் என்பதனால் துன்பந் தருமுரை. இன்னுரை — புறப்புண்பட்ட பழிதீர வடக்கு இருந்து உயிர் விடுகின்றான் என்பதனால் இன்பந் தருமுரை. அரும்பெற லுலகம் — வீர சுவர்க்கம். சான்றோர் தமக்கு அயலான் வடக்கிருந்தமைக்கு உயிர்விட்டனராகவும், யானோ என் மகளைப் பிரிந்தும் போகாத உயிருடன் கூடியுள்ளேன் என்று வெறுத்தாள் என்க. மெய்ப்பாடு — அழுகை. பயன் — தன்னை யாற்றல்.

(மேற்கோள்) 'தாய்க்கு முரித்தாற் போக்குடன் கிளப்பின்' (தொல். பொருளியல்-4) என்னுஞ் சூத்திரத்து, இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் இச் செய்யுளுள் 'கண்படை பெறேன் கனவ' என்பதனை எடுத்துக் காட்டி, முறையே உடன் போக்கின் கண், நற்றாய்க்கும் கனவு உரித்தாயிற்று எனவும், செவிலித் தாய்க்குங் கனவு உரித்தாயிற்று எனவும் கூறினர்.

வடக்கிருத்தலாவது: உத்தர திசையிற்சென்று விரதத்தால் தம்முடம்பை மெலிவித்திருந்து யோகப் பயிற்சியால் தம்முயிரை விடுதல். இவர் மேலுலகை யடைவர். இதனைப் புறநானூறு 65ஆம் செய்யுளின் கீழ்க்குறிப்பானறிக. 66ஆம் செய்யுளிலும் சேரலாதன் வடக்கிருந்தமை சொல்லப்படுகின்றது. புறப்புண் — முதுகிற் பட்ட புண். மார்மை ஊடுருவி முதுகின் வழி அம்பு செல்லுதலால் முதுகிற் புண் தோன்றும். அதனையும் புறப்புண்ணாகவே வீரர் கொள்வர். அங்ஙனமே இவனும் கொண்டு நாணினன் என்க. பெரும்பிறிது என்பது பெரும்பிரிவு என்றிருப்பது நலம். பிறிது — பிறிதல் எனத் தொழிற் பெயராக ஈண்டுக் கொள்க.

---

# திருமுறைப் பாடல்கள்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ன்றது. ஓதுவார் கேட்பார் உள்ளங்களை உருக்கி அவர்களுக்கு உய்யும் நெறியை அளிக்கும் சிறந்த தமிழ் நூல்களைப் பன்னிரு திருமுறைகளாக நம் முன்னோர்கள் வகுத்தனர். சம்பந்தர் பாடிய தேவாரம் முதல் மூன்று திருமுறைகள். அப்பர் பாடியன நாலாம் ஐந்தாம் ஆறும் திருமுறைகள். சுந்தரர் தேவாரங்கள் ஏழாம் திருமுறை. மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமுந் திருக்கோவையாரும் எட்டாந்திருமுறை. திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் ஒன்பதாந் திருமுறை. திருமந்திரம் பத்தாந் திருமுறை. திருமுகப்பாசுரம் முதலிய நாற்பது பிரபந்தங்களும் பதினோராந் திருமுறை. பெரியபுராணம் பன்னிரண்டாந் திருமுறை, "தோடுடைய செவியன்" என்று தொடங்கி "உலகெலாம்" என முடியும் இப் பன்னிரு திருமுறைகளிலும் 18000-க்கு மேற்பட்ட பாடல்கள் உள. இவற்றினைச் சிவஞானச் செல்வர் இருபத்தெழுவர் பாடினர். இத்திருமுறைகளில், முதற் பதினொன்றையும் நம்பியாண்டார் நம்பி இராசராச சோழன் விரும்பியபடி வகுத்துவைத்தார். இவ் வரலாற்றைத் திருமுறை கண்ட புராணம் விரிவாகக் கூறுகின்றது. இப் பதினொன்றுடன் சேக்கிழாருடைய பெரிய புராணத்தைப் பன்னிரண்டாவது திருமுறையாக்கிச் செப்பேட்டில் எழுதுவித்தவர் பெரியபுராணத்தைப் பாடுவித்த அநபாய சோழரேயாவார். இச் செய்தியைச் சேக்கிழார் புராணங் கூறுகிறது. இத்திருமுறைகள் யாவும் எந் நாட்டவர்க்கும் இறைவனாகிய தென்னாடுடைய சிவபெருமானையும் அவருடைய அடியார்களையும் பற்றிப் பாடப்பட்டன. சிவன் அருளால் அவனருள் வணங்கிச் சிவஞானங் கைவரப் பெற்ற பெருமக்களால் இயற்றப்பட்ட பெருமை வாய்ந்தன; வடமொழி வேதங்களிலும் சிறந்தன எனக் கருதப்படுகின்றன. 'எழுதுமாமறை' எனவும் "எழுது மறை" எனவும் போற்றப்பட்டுள்ளன. வடமொழி வேதங்களை மட்கலமெனவும், இவற்றைப் பொற்குடமெனவும் அறிஞர்கள் கூறுவர். வடமொழி வேதங்களை ஓதினால் உள்ளமும் ஊனும் உருகுவதில்லை என்பதையும், இவற்றைப் பொருளுணர்ந்து பாடினாற் கருங்கல் மனமும் கரைந்துவிடும் என்பதையும் அறிஞர் பெருமக்கள் அழகாக எடுத்துக் கூறி இருக்கின்றனர். திருமுறை கண்ட அபய குல சேகர மன்னன் தேவாரங்களை ஓதக்கேட்டு அடைந்த நிலையைக் "கையிரண்டும் உச்சிமேல் ஏறக் கண்ணீர் கரைந்தோட மெய்ம்முழுதும் புளகம் போர்ப்ப ஐயன் மலர்ப் பதமுளத்தே கொண்டு போற்றி" எனும் செய்யுட்பகுதி இன்றும் நமக்குக் காட்டுகின்றது.

இத் திருமுறைகளிலுள்ள பாடல்கள் யாவும் ஒப்புயர்வில்லாத தமிழ் மந்திரங்களாகும். நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப என்று தமிழ் மந்திரங்களைப் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிட்டார். "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்" என்பது வள்ளுவர் பெருமான் வாய்மொழி. இத்திருமுறைகளை இயற்றிய சிவஞானச் செல்வர்கள் நிறைமொழியாளர் என்பதையும், அவர்களுடைய இப் பாடல்கள் மறைமொழியாம் மந்திரங்கள் என்பதையும் சைவர்கள் யாவரும் ஏற்றுக்கொள்வர். இம் மந்திரங்களை முறைப்படி ஓதினால் முக்தை வினை முழுவதையும் ஒழித்து முத்திபெறலாம் என்பர்.

இத்திருமுறைகளின் உண்மையியல்புகளை அறியாமையாற் சாதி வேற்றுமையைச் சைவத்திற் புகுத்தித் தீண்டாமையை நிலைநாட்ட விரும்பும் நம் சைவர்கள் சிலர் கர்மத்தைத் தமக்கு உதவியாக்கி அழிவழக்குப் பேசுகின்றனர். மூடக் கொள்கைகளுக்கும் சுயநலக் கட்டுப்பாடுகளுக்கும் ஆளாகிய இவர்களைப் போன்றவர்கள் ஞானசம்பந்தர் காலத்திலுமிருந்தனர். அவர்களுக்குச் சம்பந்தர் கூறிய அறிவுரையினை இப்பொழுது நினைவூட்ட விரும்புகின்றேன்.

> அவ்வினைக்கு இவ்வினையா மென்று
> சொல்லும் அஃதறிவீர்
> உய்வினை நாடா திருப்பது
> உந்தமக் கூனமன்றே
> கைவினை செய்தெம் பிரான் கழல்
> போற்றுதும் நாமடியோம்
> செய்வினை வந்தெமைத் தீண்டப்
> பெறுதிரு நீலகண்டம்"

இதுதான் அவர்தம் திருவாக்கு. திருமுறைகளைத் தந்த சிவஞானச் செல்வர்கள் யாவரும் ஒரு முகமாகக் கூறும் உண்மை "சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்", "சிவசிவ என்றிடத் தேவருமாவர்" என்பதுதான். இதுதான் சைவத்தின் அடிப்படை என்பதையும் இதுதான் சைவத்தின் பெருமைக்குக் காரணம் என்பதையும் யாம் மறத்தல் கூடாது.

அயலார் வறுமையால் வாடி வதங்க அவர்கட்குச் சிறிதும் உதவிசெய்யாது, பெயரும் புகழுங் கருதிச் சமயச் சடங்குகளுக்கும் திருவிழாக்களுக்கும் பணத்தை வாரி இறைப்பவர்கள் உண்மைச் சைவர்கள் ஆவார்களா? பசு முதலிய பிராணிகளிடத்து இரக்கங் காட்டாமல் கோயில்களிலே ஆடு, கோழிகளைப் பலியிடுபவர்கள் சைவநெறியில் வாழ்பவர்கள் ஆவார்களா? மக்களிடையே பிறப்பால் உயர்வு தாழ்வு பேசித் தீண்டாமையைப் போற்றுபவர்கள் பிறர்க்கு இன்னுரை வழங்கத் தகுதியுடையவர்களா? இவர்களைச் சிவநெறியினர் என்று எவ்வாறு கூறலாம்? அன்பினால் மக்கள் யாவரையும் தம்மைப்போல் மதித்துப் பேணிப் பிற உயிர்களிடத்தும் இரக்கங் காட்டி வாழுகின்றவர்களே உண்மைச் சைவர்கள். அன்பே சிவம் என்பதுதான் திருமுறைகளின் முடிந்த முடிபு! வாழ்க திருமுறைகள்!


**NOTICE**

For the sale purchase of House properties, Building sites, Estates, etc. in Colombo and in any other part of Ceylon and for the letting and getting of Houses on rent in Colombo and its suburbs *Correspond to:* CHETTIAR, P.O. BOX 931, COLOMBO

**இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி**
**THE CEYLON STATE MORTGAGE BANK**

இந்த அரசாங்க ஈட்டு வங்கியிற் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையிற் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கியிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.


வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்குந் தொகை 5,000 ரூபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும்; 5,000 ரூபாவுக்குக் கூடியும் 10,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும்; 10,000 ரூபாவுக்குக் கூடியும் 50,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும்; 50,000 ரூபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல. 91, ஹோட்டன்பிளேஸ், கொழும்பு என்ற விலாசத்திற்கு எழுதி அறியவும்.

[A60]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பகுதி



## மாமா மறுமொழி

பின்வரும் மருமக்களிடமிருந்து கதைகள், கட்டுரைகள், கவிதைகள் கிடைத்துள்ளன. அனேக மருமக்கள் விஷயங்கள் எழுதி அனுப்பியபடியினால் இந்த இதழில் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாகப் பதில் தெரிவிக்க முடியாது போனதற்கு மிக வருந்துகின்றேன்.

மருமக்கள் எழுதியனுப்பிய விஷயங்களை அவ்வியம் படித்துப் பார்ப்பதுடன் சிறந்தவைகளை வெகு சீக்கிரம் வெளியிடுவேன்.

* * *

**வே. கனகசபாபதி (1047)**
i. கிலியும் குருவியும்.
ii. காட்டு மிருகம்.
iii. எங்கள் நாடு.
iv. சிவபெருமான் மண் சுமந்தமை.
v. எனது பூந்தோட்டம்.
vi. யாழ்ப்பாணம்.
vii. காலைக் காட்சி.

**ச. சாரதாதேவி (1082)**
ஊற்றுப்பேனாவின் சுயசரிதை.

**ச. நவரத்தினராசா (709)**
i. மிருகங்களின் கிரிக்கெட்.
ii. எங்கள் சுற்றுப்பிரயாணம்.
iii. யூலியஸ் சீசர்,

**க. மாணிக்கவாசகர் (1122)**
i. எனது கிராமம்.
ii. காலை கோத்தில்.

**க. சதாசிவம் (909)**
பொறுக்குமா இளைஞர் உள்ளம்?—கவிதை.

**செ. சிவசாந்தி (1031)**
போதனைத் தோட்டம்.

**பெ. சிவபாதசுந்தரம் (1030)**
சந்தர்ப்பம் தீச் செயல்களை மாற்றியது.

**ச. தங்கராசா (1086)**
மன்மத வருடப் புதுநாள்.

**ச. சின்னத்தம்பி (691)**
வெள்ளப் பெருக்கு.

**வே. சரஸ்வதி (1119)**
i. காலைப் பொழுது.
ii. மாலைக் காட்சி.

**சி. குணசேகரன் (1148)**
விஞ்ஞானத்தின் விளைவு.

**வில்வி தம்பிமுத்து (1136)**
'கேசரி மாமா'—கவிதை.

**சு. சந்தானலட்சுமி (1046)**
i. கிழிந்த பழந்துணி — சுயசரிதை.
ii. உயர்தரக்கல்வி அவசியமா?

**சு. பாலசுப்பிரமணியம் (1038)** நான் யார் என்று தெரியுமா?

**க. சதாசிவம் (909)**
கலையும் நாமும்.

**ராஜ பூமணி விக்டோரியா (855)** நிலாக் காட்சி.

**கு. இராமச்சந்திரன் (993)**
திடமனதுவேண்டும்-கவிதை.

**செ. சின்னையா (947)**
விடுதலை நாட்களை எவ்விதம் செலவிடலாம்?

**ப. கோஸ்தா**
மயில்—கவிதை.

**மூ. பாலராசா (1083)**
இவர் யார்?

**வ. இ. நடராசா (1098)**
மக்களை மகிழ்வூட்டும் மதியானர்கள்.

**இரதி சாரங்கபாணி (1081)**
காளிதாஸர்.

**கா. சோமசுந்தரம் (1075)**
i. காந்தியும் வள்ளுவரும்.
ii. நட்பின் வெற்றி.

**க. செல்வராணி (871)**
ஊழிக்காலம் வாழியவே!—கவிதை.

**வீ. கணேசமூர்த்தி (1015]**
நூலும நட்பும.

அன்பான மருமக்களே!

புத்தாண்டு தொடங்கியபின் இன்றுதான் உங்களுடன் மீண்டும் அளவளாவுஞ் சந்தர்ப்பங் கிடைத்துள்ளது. அது குறித்து மிக மகிழ்ச்சி.

மருமக்கள் அனேகர் அனுப்பிய புது வருட வாழ்த்துக்கள் கிடைத்தன. மிக மிகச் சந்தோஷம். சிலர் கடையிலே வாங்கிய வாழ்த்திதழ்களை அனுப்பியுள்ளனர். பலர் தாங்களாகவே வரைந்த வாழ்த்திதழ்களை அழகிய படங்களுடன் அன்புச் செய்திகளையும் எழுதி அனுப்பியிருந்தார்கள். வேறு சிலர் கடிதங்கள்மூலமும், தபால் அட்டைகள்மூலமும் மாமியையும் என்னையும் மனதார வாழ்த்தியுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி நன்றி செலுத்துவதென்பது முடியாத காரியம். ஆகவே செய்திகளனுப்பிய அனைவருக்கும் மாமியின்சார்பிலும் எனதுசார்பிலும் உளங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

* * *

'லீவு' நாட்களில் ஒரு பகுதி இதுவரை செலவாகிவிட்டது. இன்னும் ஒருபகுதி செலவிடப்படவேண்டியிருக்கிறது. எப்படி உபயோகமான முறையிலே செலவிடலாம் என்பதுதான் இப்போது எழுந்துள்ள கேள்வி. இதற்குப் பதிலிறுப்பதுபோல அமைந்துள்ளது மருமகன் செ. சின்னையாவின் **விடுதலை நாட்களை எவ்விதஞ் செலவிடலாம்?** என்ற கட்டுரை. அதனை அவசியம் படித்துப் பயனடையுங்கள்.

மீண்டும் மறுவாரஞ் சந்திப்போம்.

வணக்கம்!

கேசரி மாமா

## விடுதலைநாட்களை எவ்விதம்செலவிடலாம்?

**செ. சின்னையா (947)**

அநேக பாடசாலைகளிலே பரீக்ஷை முடிந்து விடுமுறையும் விடப்பட்டு விட்டது. ஆதலால் மாணவர்களாகிய நாம் இவ் விடுதலை நாட்களைக் கழிக்கும் வகைகளை யறிந்திருத்தல் வேண்டுமல்லவா?

இக் காலத்தில் ஏட்டுக் கல்வியினால்மாத்திரம் பயனில்லை; ஆதலால் நாம் பிறவிடங்களுக்குச்சென்று பல விடயங்களையும் பார்த்தறிதல் வேண்டும். அத்தகைய பிரயாணங்களுக்கு விடுமுறை நாட்களே வாய்ப்பான காலமாகும்: பிறவிடங்களுக்கு நாம் பிரயாணஞ் செய்யும்போது ஞாபகத்திற்காகத் தினக்குறிப்புப் புத்தகத்தையோ, அன்றிப் புகைப்படக் கருவியையோ கொண்டு செல்லல் வேண்டும். இத்தகைய பிரயாணங்களைச் செய்யும்போது தத்தம் வகுப்புப் பாடசாலை மாணவர்களுடன் சுதந்திரமாகச் செல்லல் வேண்டும். அடுத்தபடியாக நாம் ஒவ்வொருவரும் எங்களுக்கு வசதியான நூலநிலையங்களுக்குச் சென்று பல நூல்களிலுமுள்ள கதைகளையும், கட்டுரைகளையும், ஹாஸ்யக் களஞ்சியங்களையும கற்றல் வேண்டும். இன்னும் நமக்குச் சந்தேகமானவற்றை, எம்மிலும்பார்க்க அறிவிலும் அனுபவத்திலும் கூடிய பெரியார்களிடங் கேட்டறிதல் வேண்டும். எம்போன்ற மாணவர்களுடன் இலக்கியம், சரித்திரம் முதலிய விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்தல் வேண்டும். அன்றியும் நாம் இவ் விடுமுறைகளிலே இயற்கைக்காட்சிகளைக் கண்டின்புறுதலுடன் சுதேச விளையாட்டுக்களை நன்றாக விளையாடவும் வேண்டும். இரவில் விழிப்பு விரைவில் நோய் தரும். ஆதலால் விடுமுறைதானே யென நினைந்து சினிமாவுக்கோ, நாடகங்களுக்கோ, திருவிழாக்களுக்கோ இரவிற் சென்று நெடுநேரங் கண்விழித்திருத்தல் வியாதியைத் தேடிக் கொள்ள ஏதுவாகும். கண்காட்சிச் சாலைகளுக்குஞ் செல்லல் வேண்டும். கல்வியை மறவாது குறித்த நேரத்திற் கற்றல் வேண்டும். "அவப் பொழுதிலும் தவப் பொழுது நல்லது!" ஆதலால், பாடசாலை நாட்களிலே ஆலயங்களுக்குச் செல்ல இயலாதிருந்தவர் யாவரும் இவ் விடுமுறைகளிலே ஆலயங்களுக்குச் சென்று இறைவனை வழிபடல் வேண்டும். பெரியார்களுடைய சமயப் பிரசங்கங்களைக் கேட்பதும் நன்று. இன்னும் இடைவேளைகளிலே சித்திரம் வரைதல், சங்கீதம் பயிலல் இவைகளிலும் நேரத்தைக் கழிக்கலாம்.

பெண்கள் நூல்நூற்றல், தையல்வேலை செய்தல், சித்திரம் வரைதல், கைப்பணிப் பொருள்கள் செய்தல், பெரியோர்களுடைய சரித்திரங்களைப் படித்தல், பெற்றோருக்குச் சமையல் வேலைகளிலோ பிறபணிகளிலோ உதவி புரிதல், சிறு குழந்தைகளிருப்பின் அவற்றைப் பாதுகாத்தல், தம்போன்ற பெண்களுடன் சிறந்த செயல்களைப் பற்றிச் சம்பாஷித்தல், வீட்டுத் தோட்டமிருப்பின் அவற்றை நன்கு கவனித்தல், சுத்தமற்றிருக்கும் வீட்டின் அயற்புறங்களைச் சுத்தஞ் செய்தல் எனப் பலவாறாகக் கழிக்கலாம். ஆதலால் யாவரும் இவ் விடுமுறை நாட்களைச் சிறந்த முறையிலே செலவிடல் வேண்டும்.

## கண்ணில்லாதவன் ஐயா!

**நா. மூ. குமாரசிங்கம் (1053)**

அன்று ஞாயிற்றுக்கிழமை. நேரத்துடன் 'போராடு'வதற்குப் புதுமைப்பித்தனின் 'கபாடபுரம்' என்னும் நூலைப் படித்துக் கொண்டிருந்தேன். மனதில் நிம்மதியின்மையால் நிதானமாக வாசிக்க இயலவில்லை. ஏதாவது படம் பார்க்கலாம் என்று உடை மாற்றிக்கொண்டு நண்பன் தனபாலையும் அழைத்துக்கொண்டு றீகல் தியேட்டருக்குப் புறப்பட்டேன். அன்று 'ஓடும்' படம் கொழும்புமாநகரம் முழுவதையும் ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. அவ்வளவு சிறந்த படம்! 'டிக்கட்' கிடைப்பதென்பதோ பகற் கனவு. அப்படியிருந்தும் ஏதோ நப்பாசையாற் சென்றோம்.

உலகத்திலேயே எனக்குப் பிடிக்காதது 'டிராம்' வண்டி. அதுக்கு வேறே 'அநுமார் வால்' போல் நீண்ட 'கியூ'. ஏதோ படம் பார்க்க வேண்டும் என்ற ஆசையால் பொறுமையோடு டிராம் நிற்குமிடத்திற்கு அரை மைல் தள்ளிக் கியூவில் நின்றோம்.

டிராம் வண்டிக்குக் கொடுக்கும் பணத்திலும் விட அங்கு வந்து நச்சரிக்கும் 'இந்நாட்டு மன்னர்களுக்கு'க் கொடுக்க இரட்டிப்புப் பணம்வேண்டும். பிச்சைக்காரர்களுக்குப் பணம் கொடுக்கும் வழக்கம் என்னிடம் கிடையாது. அன்று வந்தவர்கள் எல்லோரையும் தட்டிக் கழித்துக்கொண்டு வந்தேன். ஆனால் ஒருவன் உடம்மை முக்கோணமாக வளைத்துக்கொண்டு எவர் மனதையும் ஈர்க்கக்கூடிய விதமாகக் கதறிக்கொண்டு வந்தான். பக்கத்திலே இன்னுமொருவன் 'கண்ணில்லாதவன் ஐயா! கண்ணிருக்குங்கனவான்களே! கருணை கூருங்கள்' என்று இலக்கணம் பிறழாமல் அடுக்குத் தொடரில் பரிதாபமாக முறையிட்டான். கிட்டநின்ற எல்லோரும் பணம் கொடுத்தார்கள். நானும் என்னையறியாமல் 'பர்சை'த் திறந்து ஐந்து சதம் எடுத்துக் கொடுத்தேன். எனது நல்வழியையே எதற்கும் பின்பற்றும் நண்பன் தனபாலும் என்னைப் பின்பற்றினன்.

ஏதோ ஒருவழியாக டிராமின் உதவியுடன் படமாளிகையை அடைந்தோம். அப்போது படம் தொடங்கிவிட்டது. இருட்டில் முண்டியடித்துக்கொண்டு கதிரையில் அமர்ந்து படம் பார்த்தோம்.

இடைவேளை வெளிச்சம் கண் கூசும்வண்ணம் பிரகாசித்தது. ஏதோ புது உலகத்திற்கு வந்தமாதிரியிருந்தது. பக்கத்தில் இருந்தவரைத் திரும்பிப் பார்த்தேன். திடுக்கிட்டு விட்டேன். 'கண்ணிலாதவன்' எனது பக்கத்திலிருந்து படம் பார்த்துவிட்டு 'எப்படிப் படம், நன்றாக இருக்கிறதா?' என்றான். அதைக் கேட்ட எனக்குப் பிச்சைக்காரரின் அக்கிரமத்தைக்கண்டு கோபங் கோபமாக வந்தது.

## புதிய மருமக்கள்

**செ. தம்பிராசா (1147)**
மீசாலைதெற்கு, மீசாலை.

**சி. குணசேகரன் (1148)**
அராலிமேற்கு, வட்டுக்கோட்டை.

**க. வே. சிறீதரன் (1149)**
நுணவில் கிழக்கு, சாவகச்சேரி.

**மா. முருகையா (1150)**
சிவானந்த வித்தியாசாலை, கல்லடி—உப்போடை, மட்டக்களப்பு.

**தே. ஆசீர்வாதம் (1151)**
சுவிசேஷ மன்றம், உடுவில்.

**மூ. கணேசன் (1152)**
அரசினர் தமிழ்ப் பாடசாலை, மருதமுனை, கல்முனை P. O.

**சி. கணேசலிங்கம் (1153)**
விக்னேஸ்வர வித்தியாசாலை, குப்பிழான்.

**மு. அப்துல் கபூர் (1154)**
வட்டக்கண்டல், கரடிப்பூவல்.

## ஒரு நாயின் முனகல்

**சி. சகுந்தலாதேவி 1082**

மாலைவேளை சிறுவர்க்கு இன்பத்தை ஈயும் நேரம். நானும் என் சினேகிதி நந்தினியும் சற்று நேரம் உலாவுவதற்குக் கடற்கரைக்குப் புறப்பட்டோம். மாலை வெய்யிலின் மஞ்சள்நிறஒளி கொஞ்சம்கொஞ்சமாக வெளிவந்து மரங்களில் இருக்கும் பச்சை இலைகளைப் பொன்னிறமாக்கிக்கொண்டிருந்தது. நாமிருவரும் ஓர் சம்பவத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு போனோம். அழுவதுபோலக் குரல் கேட்டது. நாங்கள் போய் அதைப் பார்த்தோம். ஒரு நாய் பசியின் கொடுமையால்வருந்திக்கொண்டிருந்தது

"நானும் என்நான்குசகோதரர்களும் ஒரு வைக்கோற் பட்டடையிற் பிறந்தோம். பிறந்து சிலநாளில் எஜமான் என்னை ஒரு தனவந்தருக்குக் கொடுத்தார். தாய், சகோதரரின் பிரிவு என்னை வாட்டியது. ஆனால் வாங்கியவரின் அன்பு என் துக்கத்தை மாற்றியது. நான் சிறிது வளர்ந்தவுடன் என் கழுத்தில் மணியும் கட்டி அன்பாக வளர்த்து வந்தார். எனக்கு வீட்டு வாசலில் ஒரு மெத்தை போட்டுப் படுக்கவைப்பார். நான் சாப்பிடுவதும் உறங்குவதுமாக 5 வருஷம் சென்றது. திடீரென ஒரு விபத்து என் காலை முறிக்கவே எஜமான் என்னை விரட்டிவிட்டார். நான் இப்போது ஒருவரும் இல்லாமல் தனியே அலைந்து திரிகிறேன்" என்று சொல்வதுபோல அது முனகிக்கொண்டிருந்ததைக் காண எனக்கு மிகுந்த பரிதாபம் உண்டாகிவிட்டது. என்ன செய்யலாம் விதியின்படிதானே எல்லாம் நடக்கும்!

### விண்ணப்பப் பத்திரம்

ஈழகேசரி — பாலர் பகுதி
கேசரி மாமா, ஈழகேசரி, சுன்னாகம்.

அன்புள்ள மாமா,
தயவுகூர்ந்து என்னை ஈழகேசரி—பாலர் பகுதியிற் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

முழுப்பெயர்: ______________________

விலாசம்: ______________________

______________________

பிறந்த திகதி ______________________

______________________
தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T'Phone No. 805

Registered at the G. P. O. as a Newspaper,

25TH YEAR OF PUBLICATION

# EELAKESARI

NATIONALIST TAMIL WEEKLY
Largely Circulated in Ceylon, India, Burma, Federation of Malaya & Singapore
Founder: N. PONNIAH

Vol. 25 | Chunnakam Sunday, Apr. 24, 1955 | No. 40

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா:
இலங்கை-இந்தியா ரு. 6-00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி சதம் 10. காசு 10

## ச. அம்பிகைபாகன், பி. ஏ.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

யான கட்டுரைகள் தீட்டியுள்ளார். இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல் ஈழநாட்டுப் பெருங்குடி என்ற கட்டுரையை அவர் கல்கித் தீபாவளி மலரொன்றில் எழுதியிருக்கிருர். அதில் 'வாழையடி வாழையாக அரசியல்-சமயம்-கல்வி-கலை முதலிய துறைகளில் அருந்தொண்டியற்றிய' சேர் முத்துக் குமாரசுவாமி, ஸ்ரீ பொ. குமாரசுவாமி என்போரைப்பற்றியும், சிங்களர்-சோனகர் பிணக்கு ஏற்பட்டபோது நீரமூழ்கித் தொந்தரவுக்கும் அஞ்சாது இங்கிலாந்துக்குப்போய் வெற்றிவீரனுகத் திரும்பி, 'குடை, கொடி, ஆலவட்டம்' முதலியவற்ருேடு வரவேற்கப்பட்ட இலங்கையின் முடிசூடா மன்னன் சேர் பொன். இராமநாதன் அவர்களைப் பற்றியும், தேசிய காங்கிரஸின் தந்தையாக இருந்து அரசியற் சீர்திருத்தங்களுக்கு வாதாடிய சேர் பொன். அருணுசலம் அவர்களைப்பற்றியும், கீழைநாட்டுக் கலைகள், அவற்றின் தத்துவங்கள் என்பவற்றை நுண்ணிதாக ஆராய்ந்த கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமியவர்களைப்பற்றியும் அழகாக எழுதியிருக்கிருர். கல்வி சம்பந்தமான அறிக்கைகள், மாற்றங்கள் வரும்போது அவற்றை விளக்கித் தெளிவான விமர்சனம் செய்வது என்றும் போற்றுதற்குரியதாகும்.

தமிழ் நாட்டிலே கல்கியிடத்திலும், ஈழநாட்டிலே சுவாமி விபுலாநந்தர் இடத்திலும் அவர் வைத்திருந்த மதிப்புச் சொல்லுதற்கரியது. இந்துசாதன வச்சிர விழா மலரிலே சுவாமி விபுலாநந்தர் பற்றிய ஞாபகக் குறிப்புகளை அவர் அருமையாக எழுதியிருக்கிருர். "சுவாமி விபுலாநந்தர் பல்வேறு பத்திரிகைகளுக்குக் காலத்துக்குக் காலம் எழுதிய அரிய கட்டுரைகள் தாமும் இன்னும் தொகுக்கப்பட்டு வெளியிடப்படவில்லை. இலங்கையில் புத்தகப் பிரசுரம் பெரும்பாலும் பாட புத்தகங்களோடு நின்று விடுகிறது" என்ற தன் மனக்குறையை அவர் தம் அபிப்பிராயத்தில் வெளியிட்டிருப்பது முழுவதும் உண்மை.

மகாவித்துவான் கணேசையர் சஷ்டியப்த பூர்த்தி விழா, தமிழ்விழா, நூல் அரங்கேற்றுவிழா, பெரியோரை வரவேற்கும் பல விழாக்கள் ஆகிய தமிழ், சமயம் கலை ஆகியஎந்த விழாவிலும் திரு ச. அம்பிகைபாகன் இருந்துதான் தீருவார். யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலயத்திலே அதிபராகக் கடமையாற்ற இப்படியான ஒருவர் இருப்பது யாழ்ப்பாணத்துத் தமிழர்செய்த பாக்கியமேயாகும். சொற்பொழிவுகள் நடாத்தத் திண்டாடிய பலரின் தேவையை முன்னிட்டு அவர் இப்போது தன் கல்லூரியிலேயே கலாமண்டபம் ஒன்றை ஆக்கியுள்ளார். அவரின் தமிழ் உள்ளத்தில் மலரும் அரிய நூலொன்றை ஈழநாடு எதிர்பார்த்திருக்கிறது.

கரவைக் கவி கந்தப்பனுர்

## கேட்டதும் நடந்ததும்

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரக்காய்த் தானிருக்கும்" என்று சகுந்தலை தன் நடைவேகத்தைக் குறைத்துக்கொண்டு சொன்னுள். அவளுக்குத் தெரியாது என்பது மட்டுமல்ல, அவள் அந்தப் பேச்சு வளராமல் தடுப்பதற்காகவே அப்படிப் பேசுகிறுள் என்பது அவள் முகத்திலேயே எழுதி ஒட்டியிருந்தது. பேச்சு வளர்ந்தாலும்கூட எல்லாவற்றையும் கற்பனையென்று ஒதுக்கி விடக்கூடிய முறையில் அவள் பேச்சு அமைந்தது.

"ஏன் அப்படிச் சொல்கிறுய்? உன் அத்தை கண்மணியில்லையா? அவள் கணவன் ரங்கசாமிக்குக்கூடவா விவரங்கள் தெரியாது?"

",அவர்களோடு நான் பேசுவதில்லை. அவர்கள் வீட்டுக்கு நான் போவதுமில்லை. உறவினர்கள் என்று சொல்லிக்கொள்ளவே எனக்கு வெட்கமாயிருக்கிறது."

(தொடரும்)

## அப்பரின் அன்புநெறி

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிராணுர்பாற் பெற்றதும் வீரட்டானத்தில் சலப்பந்தரால் அப்பரே என அழைக்கப்பட்டதும் இறுதியில் 'எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனே' என்னும் திருத்தாண்டகத்தைப் பாடிய வண்ணம் சிவானந்த வடிவாகச் சிவத்திற் கலந்ததும் நீங்கள்ளெல்லோரும் நன்கறிந்த விஷயங்களே. அப்பரின் அற்புத வாழ்க்கையை அறியாது திருமுறை விழாக் கொண்டாடுவதிற் பிரயோசனமில்லை.

அப்பர் விளக்கிய அன்பு நெறிபற்றிப் பேசுமுன் அவரது அருங்குணங்களைச் சிறிது ஆராய்வாம். அவரது பாடல்களில் ஆகம சாஸ்திர நுட்பங்கள் மிளிர்வதுபோலவே உபநிடதக் கருத்துக்களும் மலிந்துள்ளன.

நாவுக்கரசர் பாடிய தேவாரங்கள் 700 எனச் சுந்தரர் பாடியுள்ளார். நம்பியாண்டார் நம்பியும் அத்தொகையைக் குறிப்பிட்டுள்ளார். ஆனுல் இன்று வழக்கிலிருப்பவை மொத்தப் பாடல்கள் 3066 கொண்ட 312பதிகங்களேயாம். இப்பாடல்களில் ஒன்றிலாவது பிறர் மனதைப் புண்படுத்தக் கூடிய வன்சொல்லைக் காண முடியாது. அவர் வணங்கிய சிவம் அவருக்கு அன்பென்னும் கருத்தையே கொடுத்தது. திருமூலரைப் போலவே இவருக்கும் அன்பும் சிவமும் ஒன்ருகத் தோன்றின.

அப்பரின் அன்பு நெறியை நாம் உண்மையில் உணர்ந்து கொள்வதற்கு வஞ்சமற்ற நெஞ்சு வேண்டும். உள்ளத்தில் அன்பு சத்தியம், அகிம்சை மூன்றும் வேண்டும். அன்பின் வெற்றியை அளப்பதற்கு அளவுகோல்போல இருபதாம் நூற்றுண்டில் வள்ளல் காந்தியின் வாழ்க்கை அமைந்திருந்தது. அவர் மறைந்தபின் நம்முன் எழுந்தருளியிருக்குங் குன்றக்குடி அடிகளாரின் வாழ்க்கையும் வாக்கும் அதேயிடத்தை எடுத்துள்ளன. அப்பர் சுவாமிகள் காந்தியடிகள் இருவரும் சமண மதத்தொடர்பு பெற்றது குறிப்பிடத்தக்கது. சமணர்களின் தீய செயல்களைக் கண்டிப்போம். ஆனுல் அவற்றுக்காகச் சமணத்தில் துவேஷம் கொள்ளக் கூடாது. இன்று உலகில் நிலவும் முக்கியமான மதங்களெல்லாம் மாணிக்கவாசகரின் அன்புக் கொள்கைகள் பலவற்றைத் தமதாக்கியுள்ளனவென்ற உண்மையை எவரும்மறக்கமுடியாது.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்

டிக்கோயாவில்
ஈழகேசரி
கிடைக்குமிடம்:
லிங்கம் ஸ்ரோஸ்
டிக்கோயா

மாதவிடாய்




நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of the Govt. of India, under No. (CDL\688) எக்காரணத்திலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாயை அதிக சுலபமாக தவருமல் உடனே வெளியாக்கும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 10-0-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 13—0—0. (த. சி. தனி)

கர்ப்பத்தடை





நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Regd. No. 266
12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். பில்ஸ் விலை ரூ. 15-0-0. (த. சி. தனி.)

சிலோன் ஏஜண்ட்: New Colombo Medical Stores, 82, Main St., Colombo-11
Mfgrs: SEENU & Co., Post Box. 1638. MADRAS-1
பிரான்ச்: 134, SARANGOON ROAD, சிங்கப்பூர்-8.




வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பக
வெளியீடுகள்
வித்தியா பிரசுர சபையாரின் அங்கீகாரம் பெற்றவை.





பாலபோதினி- வாசிப்புப் பாட புத்தகங்கள் கீழ்ப்பிரிவு 1, 2, 3, 4, 5, 6, 7 ஆம் புத்தகங்கள்

இலக்கியமஞ்சரி- இலக்கிய பாட புத்தகங்கள் 3, 4, 5, 6, 7ஆம் புத்தகங்கள்

கணித நூல்கள்: பரமேசுவரக் கல்லூரிக் கணித விஞ்ஞானப் பகுதிப் பிரதமாசிரியர் திரு. ச. சிதம்பரப்பிள்ளை. B. A. B. Sc., அவர்கள் VI ஆம் வகுப்புத் தொடக்கம் உயர்தர வகுப்புவரை தொடர்ந்து பயிலக்கூடிய முறையில், செம்மையான தமிழில், இலகுவானநடையி லெழுதிய

அக்ஷர கணிதம் (ALGEBRA IN TAMIL) கேத்திர கணிதம் (GEOMETRY IN TAMIL) எண் கணிதம் (ARITHMETIC)




சரித்திர கதாவாசகம்- 2, 3, 4, 5ஆம் வகுபபுக்கள்
பூமிசாஸ்திரம் - 2, 3, 4 5ஆம் வகுப்புக்கள்
தமிழ் மஞ்சரி; தமிழ் இலக்கியச்சுடர்; தமிழ் மலர் மாலை உரைநடை விருந்து, கிராதார்ச்சுனீயம்; திருமாவளவன்; குசேலர் சரிதம்; இதோபதேசம் இராமாயணச் சுருக்கம், தமயந்தி; இராஜா தேசிங்கு; பரதன் முதலியன.




விற்பனவு உரிமையாளர்:
சுன்னுகம்: தனலக்குமி புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா—சபாரத்தினம் அவர்களால் சுன்னுகம், 'தலையாட்டி'யிலுள்ள திருமகள் அழுத்தகத்தில் 1955ஆம் ஆண்டு ஏப்பிரல்மீ 24ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.